



The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 8, இதழ் - 4, ஜூலை - ஆகஸ்ட் 2022

R5292

## THE NEW COVENANT
## புது உடன்படிக்கை

"இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். "- எரேமியா 31:31

தேவன் மனுக்குலத்தை மறுபடியும் தம்முடன் நல்லிணக்கதிற்கு கொண்டு வருவதற்கான தேவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான ஒரு புது ஏற்பாட்டை புது உடன்படிக்கை என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. தேவனுடன் நல்லிணக்கம் என்பது ஆரம்பத்தில் ஆதாம் தேவனுடன் அனுபவித்த உடன்படிக்கை உறவாகும். அது ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்து போனது, ஆனால் சீனாய் மலையில் இஸ்ரயேலர்களோடு நிழலாக புதுப்பிக்கப்பட்டது. ஆனாலும் அதன் மூலம் ஆசீர்வாதமான வாழ்வை அவர்களால் பெற முடியவில்லை.

நியாயப்பிரமாண உடன்படிக்கை மோசேயின் மத்தியஸ்தத்தால் ஏற்படுத்தப்பட்டது. (யாத்திராகமம் 19:3-9; 24:3-8) இஸ்ரயேலர்கள் அவரது நியாயப்பிரமாணத்தை கடைபிடித்தால் அவர்கள் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வார்கள் என்று தேவன் ஒப்புக்கொண்டார். மத்தியஸ்தராகிய மோசே மூலமாக கொடுக்கப்பட்ட பலிகள் மூலம் நியாயப்பிரமாண உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது. இந்த நிழலான பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் இந்த பாவ நிவாரண பலிகள் வருஷந்தோறும் தொடர்ந்து செய்யப்பட்டு வந்தன.

பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கை இஸ்ரயேலர்களை தேவனுடன் நிழலான உறவுக்குள் கொண்டுவந்தது போல, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தம் சகல மனுக்குலத்தையும் உண்மையான உடன்படிக்கையின் உறவுக்குள் கொண்டு வந்து, தெய்வீக பிரமாணத்தை அவர்கள் தொடர்ந்து கடைபிடிக்கும்படியான தெய்வீக கிருபையின் நிலைமைக்குள் கொண்டு வரும். இந்த புது பிரமாண உடன்படிக்கையை புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் மூலமாக அறிமுகப்படுத்துவார். அவரில் தான் இந்த முழு ஏற்பாடுகளும் மையப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படும். இந்த மத்தியஸ்தர் ஒரு முழுமையான ஆயிரம் வருட காலம் இந்த வேலையை செய்வார். ஒரு ஆசாரியராக இருந்து அவர் மனுக்குலத்தை உயர்த்துவார். ஒரு ராஜாவாக இருந்து நீதியாக ஆளுகை செய்வார். ஜனங்களை அவர்களது சீரழிவிலிருந்து திரும்ப கொண்டு வருவதற்கும், ஏதேனில் ஆதாமினால் இழந்த தேவனுடைய சாயல் மற்றும் ரூபத்திற்கு திரும்ப கொண்டு வருவதற்கும் ஒரு முழு ஆயிரம் வருடம் எடுத்துக்கொள்ளும்.

மத்தியஸ்தத்திற்கு அடிப்படையாக இந்த சுவிசேஷ யுகத்தில் மேலான மத்தியஸ்தரின் மேலான பலிகள் இருக்கும். இந்த உண்மையான ஏற்பாடுகளில் இந்த பலிகள் மறுபடியும் திரும்ப செய்யப்படாது. மேலான பலிகள் மூலமாக மெய்யான மத்தியஸ்தர் முன்னிருந்தைப் போல ஒரு சுத்தமான பலகையில் ஜனங்கள் ஆரம்பிப்பதற்கான வல்லமையை பெறுவார். ஆகையால் இப்படியாக எழுதப்பட்டுள்ளது: "அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாதிருப்பேன்." (எபிரேயர் 8:12) மறுபடியும் வேதம் கூறுகிறதாவது: "கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன்." (எசேக்கியேல் 36:26)

பரம்பரையாக மனுக்குலத்திற்கு வந்த ஆதாமின் பாவமும் ஆக்கினைத் தீர்ப்பும் இனிமேல் யாராலும் நினைக்கப்படாது. ஆனால் கல்லான இருதயத்தை எடுத்துப்போடும் வேலை படிப்படியாக நடைபெறும். ராஜ்யத்தின் ஒழுங்கு செயல்முறை படிப்படியாக மனுக்குலத்தின் கல்லான இருதயத்தை நீக்கி, மென்மையான இருதயமுள்ளவர்களாகவும் பாசமுள்ளவர்களாகவும் ஆக்கும். இந்த புதிய நிலைமைக்குள் நுழைகிற அனைவரும் ஆதாமின் பாவத்திற்கு இனி பொறுப்பாக மாட்டார்கள். நாம் வாசிக்கிறதாவது: "பிதாக்கள் திராட்சைக் காய்களை தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின." (எசேக்கியேல் 18:2-4) புதிய ஒழுங்கு முறையின் கீழ் ஒருவன் தன் சொந்த பாவத்தினிமித்தமே சாவான்.

சகல மனுக்குலமும் அபூரண நிலைமையில் இருப்பதால் அனைவரும் பாவம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் குடும்பத்தில் தத்தெடுக்கப்படுவதின் மூலமே அவர்கள் நித்திய ஜீவனை அடைய முடியும். சாவுக்கேதுவான அவர்களது சரீரங்களை அவர் மறுரூபமாக்குவார். தெய்வீக ஆக்கினைத் தீர்ப்பு அவர்களை பற்றிக் கொள்ளாது. அவர்களது உறவுக்குள்ளாக வருகிறவர்கள் மட்டுமே தெய்வீக ஆசீர்வாதங்களை பெறுவார்கள். புது உடன்படிக்கைக்கு கீழாக கர்த்தருடைய விசேஷித்த கிருபைகள் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே இருக்கும். உயர்வதற்கான சந்தர்ப்பங்களை நிராகரிக்கிறவர்கள் ஜனங்களிலிருந்து அறுப்புண்டு போவார்கள். (அப்போஸ்தலர் 3:23)

### புது உடன்படிக்கையை முத்திரையிடுதல்

மரண தண்டனைக்குள்ளாக இருக்கிற ஜனங்களுடன் தேவன் உடன்படிக்கைக்குள் நுழைய மாட்டார். ஆகையால் நியாயப்பிரமாண உடன்படிக்கையாகிய நிழலான ஏற்பாட்டின் கீழ் ஆடு, காளைகளின் பலி தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனாலும் காளை, வெள்ளாட்டுக் கடாக்களின் இரத்தம் பாவத்தை போக்க போதுமானது ஆகாது. அது உண்மையான உடன்படிக்கைக்கு கீழாக உண்மையான பலிகளுக்கு நிழலாக இருந்தது.

புது உடன்படிக்கை இப்பொழுது முத்திரையிடப்பட்டிருந்தால், பிறகு உடன்படிக்கையின் இரத்தம் முன்னரே தயார்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது முன்னரே சிந்தப்பட்டிருந்தால், கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெற நமக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. ஆகையால் இன்னும் புது உடன்படிக்கை முத்திரையிடப்பட வில்லை என்பது ரூபகாரமாகிறது. மெய்யான காளை பலியிடப்பட்டு அவரது இரத்தம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. மெய்யான வெள்ளாட்டின பலி செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் பலி முடிவடையும் போது சகல இரத்தமும் மாபெரும் பிரதான ஆசாரியரின் கையில் இருக்கும். பிறகு ஆதாம் பாவத்திற்கு பதிலீடாக இரத்தம் உபயோகப்படுத்தப்படுவது வரும். இந்த சுவிசேஷ யுக முடிவில் மாபெரும் மத்தியஸ்தர், அவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்ய தயாராயிருப்பார்.

சகல ஜனங்களின் பாவங்களுக்காக சரிகட்டுதலுக்காக, புதிய யுகத்தில் முதல் வேலை, மகா பிரதான ஆசாரியர் மெய்யான கிருபாசனத்தில் இரத்தத்தை தெளிப்பது தான். இது செய்யப்படாமல், புது உடன்படிக்கை ஆரம்பிக்க முடியாது. புது உடன்படிக்கையை ஆரம்பிக்கும் வேலை நமது பிரதான ஆசாரியருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இரத்தத்தை பயன்படுத்துவது தான், அதை பயனுள்ளதாக்குவது தான் முத்திரையிடுவதாகும்.

புது உடன்படிக்கை நூற்றாண்டு காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு, அது அமலுக்கு வராதிருந்தது. சகல ஜனங்களின் பாவங்களுக்காகவும் பாவ நிவாரண பலியின் இரத்தம் பயன்படுத்தப்பட்டவுடனே, புது உடன்படிக்கை ஆரம்பிக்கப்படும். ஆதாம் மற்றும் அவரது இனத்தின் பாவத்திற்கு பதிலீடாக, முழு உலகத்தின் பாவங்களை நீக்குவதற்காக இரத்தமானது பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை நாம் காண்கிறோம்.

புது யுகத்தின் ஆரம்பத்தில் உலகமானது ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்கும், தனித்தனியாக அல்ல, தனிப்பட்ட முறையில் அல்ல, மத்தியஸ்தர் மூலமாக மொத்தமாக ஆரம்பிக்கும். மத்தியஸ்தரின் புண்ணியம் பயன்படுத்தப்பட வேண்டும். உலக பாவங்களுக்கு மீட்கும் பெ ாருளை கொடுப்பவர் மத்தியஸ்தரே. அதன் பலனாகிய ஆசீர்வாதங்கள் அனைத்தும் மத்தியஸ்தர் கையின் மூலமாக வருகிறது. ஆயிரம் வருட யுக முழுவதும் ஜீவனை பெறுகிறவர்கள், புது உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு கீழாக, ஜீவனை அளிப்பவர் மூலமாகவே பெறுவார்கள். (1 யோவான் 5:12) புது உடன்படிக்கையின் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டு, அதன்படி வாழ முயற்சிப்பதினால் மட்டுமே யாரும் அதன் ஆசீர்வாதத்தின் பங்கை பெற முடியும். இப்படி செய்கிறவர்கள் மட்டுமே மத்தியஸ்தரால் உதவி பண்ணப்பட்டு போதுமான கிருபை அளிக்கப்படுவார்கள்.

இளைப்பாறுதலின் காலங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனங்களின் சார்பாக கிருபாசனத்தின் மேல் இரத்தம் தெளிக்கப்படும்போது அல்லது பழைய ஏற்பாட்டு பாத்திரவான்கள் ஜீவிக்கும் உரிமை கொடுக்கப்படுவதற்கு முன்னர், தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று உயர்த்தப்படுவார்கள். தேவனுடைய பிரதிநிதியாக இருக்கும் மத்தியஸ்தரை விசுவாசிப்பதின் மூலம் தேவனில் விசுவாசிகளாக ஆக வேண்டும். இந்த பிரமாணம் முழு உலகத்திற்கும் பொருந்தும். மனுக்குலம் நித்திய ஜீவனை பெற விரும்பினால் அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பூமிக்குரிய ராஜ்ய வகுப்பில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் ராஜ்யம், பொல்லாதவர்களை அழிக்கப்படும் வரை ஆளுகை செய்ய வேண்டும். (1கொரிந்தியர் 15:24-26)

## புது உடன்படிக்கையின் பலன் உலகளாவியது

சகல மனுக்குலமும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதை பொருட்படுத்தாமல், சில நன்மைகளை பெறுவார்கள். அந்த நன்மை அவர்கள் கல்லறையிலிருந்து எழுவதாக இருக்கும். வேத வாக்கியங்கள் நமக்கு கூறுவது போல, ஒரே மனுஷனால் எல்லாருக்கும் ஆக்கினைத் தீர்ப்பு வந்தது போல, ஒரே மனுஷனுடைய கீழ்ப்படிதலினாலே நீதிமானாக்கப்படுதல் எல்லாருக்கும் வரும். (ரோமர் 5:12,18) ஆகையால் புது உடன்படிக்கையின் நன்மைகள் எல்லாருக்குமானது என்று நாம் சொல்லலாம். இந்த ஏற்பாட்டை யாரும் கடைபிடிக்க மாட்டார்கள் என்பதை தேவன் முன்னறிந்திருந்தால், அந்த உண்மை அவரது திட்டத்தை மாற்றியிருக்கும்.

மனுக்குலத்திற்கெதிரான சகல விவரங்களும் நீதியினால் ரத்து செய்யப்பட்டு, மனுக்குலம் மத்தியஸ்தர் பக்கம் திரும்பும். மனிதன் மத்தியஸ்தரின் கீழ் வைக்கப்படாமல், நீதியின் கீழ் வைக்கப்பட்டிருந்தால், அவன் நல்லதை செய்ய முடியாததினால் உடனே அவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டிருப்பான். ஆகையால் பிதாவனாவர் மனிதனின் அறிவாற்றலை எடுத்துக் கொள்ளுவதில்லை. அவர்கள் மத்தியஸ்தர் கையில் விடப்படுவார்கள். கீழ்ப்படிகிற அனைவரும் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை பெறுவார்கள். அந்த நிலைமைகளில் கீழ்ப்படியாதவர்கள் இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள்.

## மரணத்துக்கேதுவான பாவம்

சுவிசேஷ யுகத்தில் பரிசுத்த ஆவியினால் பிரகாசிக்கப்பட்டவர்கள் மட்டுமே பரிசுத்த ஆவிக்கு விரோதமாக மரணத்துக் கேதுவான பாவம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியை பெற்றும் தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் பெலன்களையும் ருசி பார்த்தும் மறுதலித்துப் போனவர்களை மனந்திரும்புகிறதற்கு ஏதுவாக புதுப்பிக்கிறது கூடாத காரியம்." (எபிரேயர் 6:4-6) அவர்கள் பாவம் தெரிந்தே செய்யப்பட்டது அல்லது "பரிசுத்த ஆவிக்கு விரோதமாக" செய்யப்பட்டது.

ஆகையால் இப்பொழுது சபை மட்டுமே சோதனையில் இருக்கிறது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் ஜீவனா அல்லது மரணமா என்கிற சோதனையில் இருக்கிறார்கள். இப்பொழுது இரண்டாம் மரணத்தில் மரிக்கிறவர்களுக்கு எதிர் காலத்தில் சந்தர்ப்பம் இருக்காது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட இவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்தால் சிறுமந்தை வகுப்பில் இடம் பெறுவார்கள். இந்த பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட இந்த வகுப்பாரில் சிறு மந்தையில் இடம் பெற தவறியவர்கள், இறுதியில் ஜெயங்கொண்டால் தாழ்ந்த சுபாவத்தில் ஜீவனை பெறுவார்கள். அவர்கள் திரள் கூட்டத்தாராக இருப்பார்கள். ஆனால் அவர்கள் இந்த இரண்டு நிலைமைகளில் ஏதாவது ஒன்றை பெறத்தவறினால், அவர்களுக்கு இரண்டாம் மரணம் மட்டும் வைக்கப்பட்டிருக்கிறது.

உலகத்தை பொருத்தவரை அவர்களுக்கு இன்னும் நியாயத்தீர்ப்பின் நாள் வரவில்லை. உலகமானது இன்னும் ஆதாமின் ஆக்கினைத் தீர்ப்பினால் எந்த உரிமைக்கும் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களுக்குக் கூட தற்கால இரட்சிப்பில் பங்கோ, பாத்தியதையோ இல்லை. அவர்களுக்கான ஆசீர்வாத ஏற்பாட்டின் காலம் ஆயிரம் வருட யுகமாக இருக்கும். அப்பொழுது அவர்களது பாவங்களும் மீறுதல்களும் மன்னிக்கப்படும்.

இப்பொழுது நமது பாவங்கள் மறைக்கப்பட்டுள்ளது போல முழு உலகமும் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பார்கள். அப்பொழுது உலகமானது மாபெரும் மத்தியஸ்தராகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

எனினும் அவர்கள் தற்கால செயல்களுக்காக சில நிச்சயமான தீர்ப்புகளை அல்லது தண்டனைகளை அல்லது அடிகளை பெறுவார்கள். இது நீதியானது அவர்களுக்கு எதிராக உள்ள எதையும் பிற்பாடும் வைத்திருக்கும் என்பதினால் அல்ல, ஆனால் மனித சுபாவ பலவீனங்கள் அவர்களது மாம்சத்தில் விடப்பட்டிருக்கிறதினாலே ஆகும். அவர்களது பாவம் பரிசுத்தத்தின் ஆவிக்கும், பரிசுத்த ஆவிக்கும் விரோதமாக அறிந்தே, தெரிந்தே செய்யப்பட்டதாக இருந்தால், இரண்டாம் மரணத்திற்கான ஆக்கினைத் தீர்ப்பே அவர்களுக்கு தண்டனையாக இருக்கும் என்பது அவர்களது விஷயத்தில் உண்மையாக இருக்கும்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமாக செய்யப்பட்ட பாவத்தை தவிர மற்ற அனைத்து பாவங்களும் மன்னிக்கப்படும் என்று நமது கர்த்தராகிய இயேசு கூறினார். ஆனால் யாருக்கு இது சொல்லப்பட்டதோ, அந்த பரிசேயர்கள் இந்த பாவத்தை செய்ய முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் முழு அறிவையும் பெற்றிருக்கவில்லை. (மத்தேயு 12:31,32)

## பாவ மன்னிப்பு முழுமையானது

தெய்வீக நீதியின் திருப்தியை தேவன் அங்கீகரித்து பாவிகளை பொருத்தவரை சுத்தப்படுத்தும் போது, அதை அவர் இயேசுவின் கணக்கில் மாற்றுவார் என்றும், அதை இயேசு அவர்களுக்கு எதிராக வைத்திருப்பார் என்றும் இது பொருள் படாது. பிதாவானவர் மன்னித்திருக்கிற காரியங்களை, நமது கர்த்தராகிய இயேசு மனுக்குலத்திற்கு எதிராக பிடித்துக் கொண்டிருக்க மாட்டார். மாறாக, கர்த்தர் பிதாவானவரின் பிரதிநிதியாக இருந்து அந்த பாவ மன்னிப்பின் அனுகூலத்தை மனுக்குலத்திற்கு அருளுவதில் சந்தோஷமடைவார். பிதாவானருக்கும் அவர்களுக்கும் ஒரு தூரத்தை பராமரித்து மத்தியஸ்தராக இருப்பார். மறுசீரமைப்புக்கு குணலட்சண அபிவிருத்தி முதலானவைகளுக்கு நேரத்தை கொடுத்து, அவர்களது கல்லான இருதயத்தை நீக்கிப் போடுவார்.

தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் கூறுகிறதாவது: “அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாதிருப்பேன்.” அப்போஸ்தலர் பவுல் நமது கவனத்தை இந்த அறிக்கைக்கு திருப்புகிறார். ஆனால் இது நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக செய்யப்படவில்லை. ஆனால் பாவம் அப்படியே இருந்தது. ஏனெனில் பாவ நிவாரண பலி வருடந்தோறும் புதிதாக செய்யப்பட்டு வந்தன. தாழ்ந்த பலிகளால் பாவத்தை போக்க முடியவில்லை. ஆதி பாவம் அப்படியே இருந்தது. (எபிரேயர் 10:1-4) எனினும் கிறிஸ்துவுக்குள்ளான இந்த புதிய உடன்படிக்கை முற்றிலுமாக பாவத்தை நீக்கிப்போடும். (எரேமியா 31:31-34; எசேக்கியேல் 36:25-29)

## எதிர்கால வெகுமதிகளும் தண்டனைகளும்

வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகிறதாவது: “சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.” (ஏசாயா 3:2) பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் பூமியிலே பிரபுக்களாக வைக்கப்படுவார்கள். (சங்கீதம் 45:16) இது நிச்சயமாக முதலாவதாகவும் பிரதானமாகவும் யூதர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இயற்கையாகவே புது ஒழுங்கு முறைகளின் கீழ் முதலாவதாக வருவார்கள். சகல யூதர்களும் இப்படி செய்வார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு கணிசமான யூதர்கள் வருவார்கள் என்று நாம் நம்புகிறோம். அநேக நல்ல ஜனங்கள் கர்த்தரிடம் உடன்படிக்கை செய்யாதிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்களை தடை செய்வதற்கு பதிலாக உதவி செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களை “சகல ஜாதிகளாலும் விரும்பப்படுகிற” இராஜ்யத்துடன் இணைத்துக் கொள்வார்கள்.

பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களின் அபூரணத்திலிருந்து விடுதலையானது அவர்களை கவனத்தை கவர்கிறவர்களாக ஆக்கும். இது குறித்து உலகம் அறிய வரும் போது அவர்கள் கேட்பார்கள். இவர்கள் தேவனுடைய ஜனங்கள் இல்லையா? தேவன் பழைய ஏற்பாட்டு பாத்திரவான்களுக்கு மேன்மையான உயிர்த்தெழுதலைக் கொடுத்து வெகுமதி அளித்திருக்கிறார் என்பதையும் அவர்களது கடந்த கால விசுவாசத்தினால் மேன்மையான உயிர்த்தெழுதல் கொடுக்கப்பட்டது என்பதையும் அறிந்து கொள்ளுவார்கள்.

## தேவனுடனான உடன்படிக்கையின் உறவு நிபந்தனைக்குரியது

முழு உலகத்தின் பாவத்திற்கான விலைக்கிரயத்தை இயேசு கொடுத்து, முடிவாக அதை நீதியின் கைகளில் ஒப்படைப்பார். விலைக்கிரயம் நீதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, முழு உலகத்தின் பாவங்களும் நீக்கப்படும். சகலமும் மாபெரும் மத்தியஸ்தர் கட்டுப்பாட்டில் வரும். புது உடன்படிக்கை ஆரம்பித்த பிறகு, அந்த உடன்படிக்கையின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிப்பது ஜனங்களின் பங்காக இருக்கும். மத்தியஸ்தரின் ஆளுகையில், அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறினால் அந்த பிரமாணத்திற்கு இணக்கமில்லாதவர்களாக இருப்பார்கள். ஏனெனில் மத்தியஸ்தரானவர் அவர்களுக்கும் பிரமாணத்திற்கும் நடுவே நிற்பார்.

தற்கால வாழ்வில் செய்த மீறுதல்களை அவர்களுக்கு எதிராக மத்தியஸ்தர் பிடித்துக்கொள்ள மாட்டார். இதற்கு மனுக்குலம் தொந்தரவு கொடுக்காத சரீரத்தை பெற்றிருப்பார்கள் என்று பொருள் அல்ல. ஆனால் இந்த புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு கீழாக, இந்த மேலான மத்தியஸ்தர், அவர்களது விழுந்துபோன நிலைமையில் காணாததால் அவர்களது துன்பங்களிலிருந்து அவர்களை மீட்க அவர்களுக்கு உதவி செய்கிறவராயிருப்பார். ஏனெனில் புது உடன்படிக்கையின் தேவைகளை ஜனங்கள் புரிந்து கொள்ள அவர் உதவிசெய்வார்.

ஒருவர் இளைப்பாறுதலை அனுபவிக்கும் முன் நீதியானது திருப்திபடுத்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. நீதியானது திருப்திப்படுத்தப்படாமல் பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் கூட ஆசீர்வதிக்கப்பட முடியாது. மத்தியஸ்தர் தெய்வீக நீதிக்கு மீட்கும் பொருளை கொடுத்த பிறகு தான் புதிய உடன்படிக்கையை ஆரம்பிக்கும் உரிமையை பெறுவார். பழைய ஏற்பாட்டு கால

பாத்திரவான்கள் தான் அதன் கீழ் முதலாவது ஆசீர்வதிக்கப்படுகிறவர்களாக இருப்பார்கள். அவர்களது உயிர்த்தெழுதல் நிறைவடைந்து பூரண மனித இளைப்பாறுதலுக்கு வருவார்கள். ஏனெனில் அவர்களது ஜீவிய காலத்தில் தேவனை பிரியப்படுத்தின இந்த சாட்சியத்தை பெற்றிருந்தார்கள். (எபிரேயர் 11:5)

பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் மரணத்திலிருந்து விழித்தெழும் வரை புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குள் நுழைய முடியாது. ஆகையால் முன்னர் சொல்லப்பட்டது போல, அவர்கள் விழித்தெழுவதற்கு முன்பு நீதியின் தேவை சந்திக்கப்பட வேண்டும். தேவன் புது உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்திய பிறகு, இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் பூமிக்குரிய உட்கருவான ராஜ்யத்தை ஏற்படுத்துவார்கள். ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியுடன் உலகத்தின் பல்வேறு ஜாதிகளும், வம்சங்களும் சேர்க்கப்படுவார்கள்.

தேவனுடனான உடன்படிக்கையின் உறவு என்பது பரிபூரணம். மனுக்குலமானது கிறிஸ்துவின் ஆயிர வருட ராஜ்யத்தில் இந்த பூரணத்தை அடைவார்கள். ஆனால் மத்தியஸ்தர் அவர்களை ஆயிரம் வருட முடிவில் தேவன் பக்கம் திருப்பும் வரை இந்த பூரணத்திற்குள் அவர்கள் நுழைய முடியாது. அந்த காலத்தின் முடிவில் யேகோவா தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழையும் உரிமையை பெறுவார்கள். பிறகு அவர்கள் தனித்தனியாக நிற்க வேண்டும் அல்லது விழ வேண்டும். நாம் வேத வாக்கியங்களில் வாசிக்கிறது போல ஆயிரம் வருட முடிவில் சாத்தான் கொஞ்ச காலம் விடுதலையாக வேண்டும். அநீதியை சிநேகிக்கிறவர்கள் அனைவரும் அவனால் வஞ்சிக்கப்படுவார்கள். மனுக்குலத்தில் மீதமுள்ளோர் சோதனையில் ஜெயங்கொண்டு நித்திய ஜீவனைப் பெறுவார்கள். பாவம் உலகத்தில் நுழைவதற்கு முன்பு ஆதாமுக்கு தேவனுடன் உடன்படிக்கையின் உறவு இருந்தது போல, அவர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவை மத்தியஸ்தர் இல்லாமல் பெறுவார்கள்.

## சபை புது உடன்படிக்கையின் கீழாக இல்லை

சபையானது புது உடன்படிக்கையின் கீழாக இருக்காது. ஆகையால் புது உடன்படிக்கையின் கீழாக ஆசீர்வதிக்கப்படும் என்று கூறுவது சரியாக இருக்காது. ஆனால் சபையானது புது உடன்படிக்கையின் சம்பந்தமான ஆசீர்வாதத்தையும், உரிமையையும் பெறும். அங்கே புது உடன்படிக்கை இல்லையென்றால், மத்தியஸ்தரும் தேவை இல்லை அல்லது மேலான பலிகள் நிறுவப்பட வேண்டிய அவசியமும் இல்லை.

தேவன் நம்மை புது உடன்படிக்கையின் ஊழியக்காரராக்கியிருக்கிறார் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இப்படியாக நாம் அதற்கான முன்னேற்பாடுகளை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். (2 கொரிந்தியர் 3:6) மேலான பலிகள் இல்லையென்றால் புது உடன்படிக்கைக்கான அடிப்படையே இருந்திருக்காது. தற்காலத்தில் சபையானது பெறுகிற பாடுகளானது ஆசீர்வாதமான சலுகையாக இருக்கிறது. ஏனெனில் நாம் புது உடன்படிக்கையின் ஊழியர்களாக இருக்கிறோம். அதாவது அது ஆரம்பிக்கப்படும் போது எதிர்கால ஊழியத்திற்காக நாம் பயிற்சியில் இருக்கிறோம்.

ஒரு பெரிய கட்டம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன் மூலம் அதில் வேலை செய்கிற அனைவரும் அதிகமான பயனை அடைகிறார்கள் என்று கூறலாம். எதிர்காலத்தில் அந்த கட்டம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் போது அவர்களுக்கு எந்த பயனும் இருக்காது. கட்டப்படும் போது தான் பலனை அடைவார்கள். ஆகையால் இப்போது சபை வகுப்பார் புது உடன்படிக்கையுடன் இணைந்த குறிப்பிட்ட ஆசீர்வாதங்களையும், உரிமைகளையும் பெறுகிறார்கள். பிற்காலத்தில் முழு உலகமும், அதன் மூலம் மிகவும் வேறான வழியில் ஆசீர்வாதத்தை அடைவார்கள்.

சுவிசேஷ யுகத்தில் தேவன் சபையாரோடு மட்டுமே தொடர்பு கொள்கிறார், உலகத்தோடு அல்ல. எனினும் இப்போது சபைக்கு வரும் தேவனுடைய ஆசீர்வாதத்துக்கும், சீக்கிரத்தில் உலகத்திற்கு வரப்போகிற ஆசீர்வாதத்திற்கு சில ஒற்றுமை இருக்கின்றன. ஆதியிலே ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டது போல, தேவன் அவருடைய பிரமாணத்தை மனுக்குலத்தின் இருதயத்தில் மறுபடியும் எழுதுவார். ஆயிரம் வருட முடிவில், அபாத்திரராக காணப்பட்டு, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுகிறவர்களைத் தவிர, மனுக்குலம் முழுவதும் தேவனுடைய மாம்சீக ரூபத்தில் இருப்பார்கள்.

சபையானது தற்போது காரியங்களை சரியானபடி நோக்குகிற புது இருதயத்தை பெற்றிருப்பதாக சொல்லப்படுகிறது. எனினும் சபையை பொருத்தவரையில் கல்லான இருதயத்தை எடுத்துப்போடுவது என்பது இல்லை. ஆனால் ஒரு புதிய சுபாவம், ஒரு புதிய இருதயம் இருக்கிறது. இது நிச்சயமாக மாம்சத்தோடு கிரியை செய்ய வேண்டியிருக்கிறது. ஏனெனில் மாம்சமானது, புது சிருஷ்டியோடு கிரியை நடப்பிக்க வேண்டியிருக்கிறது. தேவனுடைய பிரமாணம் புது சிருஷ்டியின் பலவந்தத்தின் கீழாக மாம்சத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

## நிழலான ஆசீர்வாதங்களின் விநியோகம்

சபையானது மனக்குலத்திற்கு கொடுக்கக்கூடிய புது உடன்படிக்கை, ஆசீர்வாதமாக இருக்கிறது. அது நிச்சயமாக தேவனுடைய உடன்படிக்கை. இந்த காரியத்தை செய்ய தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார். இது தலையாகிய இயேசுவும் அவரது சரீரமாகிய சபையும் சேர்ந்த கிறிஸ்து மூலமாக உலகிற்கு செல்ல தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார். மேலான பலிகளினால் இந்த புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை உலகிற்கு அளிக்க சாத்தியமுண்டு.

இவைகளை சபையானது கொடுக்க வேண்டும் என்றால் அதை அவர்கள் முதலில் பெற்றிருக்க வேண்டும். முதலில் தன்னிடம் இல்லாததை எந்த மனிதனும் கொடுக்க இயலாது. புது உடன்படிக்கை உலகிற்கு கிறிஸ்துவின் ஒரு ஏற்பாடு அல்லது ஒரு பரிசு என்பது வேத வாக்கியங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு பரிசு. அதில் சபையும் பங்கு பெறுகிறது. ஏனெனில், “நாம் பாடுபட்டால் நாம் அவரோடு ஆளுகை செய்வோம். நாம் அவரோடு கூட மரித்தால் அவரோடு கூட பிழைத்தும் இருப்போம்.” சகலமும் நமக்குரியது, ஏனென்றால் நாம் அவருடையவர்கள்.

இந்த காரியங்கள் பழைய ஏற்பாட்டு நிழல்களில் தெளிவாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஈசாக்கு, ஆபிரகாமின சந்ததி என்றும் அவர் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் என்றும் பரிசுத்த பவுல் விளக்குகிறார். ஈசாக்கு அவரது பரம்பரை சொத்தை புது உடன்படிக்கை மூலமாக பெறவில்லை. ஆனால் முதலாவதான அல்லது ஆதி உடன்படிக்கையினால் பெற்றுக்கொண்டார். இது நியாயப்பிரமாண உடன்படிக்கையல்ல.

மீகா 4:1-4 இல் நாம் வாசிக்கிறதாவது: "கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் (ராஜ்யம்) பர்வதங்களின் (ராஜ்யங்களின்) கொடு முடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடி வருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்கு போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்.

அந்த அதிகாரத்தில் தொடர்ந்த வருகிற வசனம், உபயோகப்படுத்தப்படும் செல்வாக்கை காண்பிக்கிறது. பிறகு ஆசீர்வாதமும் செழுமையும் தேவனோடு இணக்கமாக இருக்கிறவர்களுக்கு உரியதாக இருக்கும். ஆனால் இப்பொழுது அது வேறானதாக இருக்கிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தெய்வ பக்தியாய் நடக்க இருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." ( 2 தீமோத்தேயு 3:12) அவர்கள் "என்னிமித்தம் பலவித தீமையான மொழிகளை சொல்வார்கள்." (மத்தேயு 5:11) இந்த யுகத்தில் அவிசுவாசிகளைக் காட்டிலும் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்கே அதிக துன்பமுண்டு.

உலகத்தனமானவர்களில் அநேகர், உலகின் பொல்லாதவர்கள் தற்காலத்தில் செழிப்பாக இருக்கிறார்கள். (நாம் பின்பற்றுகிற மார்க்கத்தினால் நாம் நமது வாழ்க்கையை பரிதாபத்துக்குரியதாக செய்து கொள்கிறோம் என்று உலகம் நினைக்கிறது. ஆனால் நாம் இதைச் செய்யவில்லை. மாறாக, நாம் அனுபவித்துக் கொண்ட நல்ல நேரத்தையும் பெற்றிருக்கிறோம். நாம் எல்லா வழிகளிலும் அனுகூலத்தைப் பெற்றிருக்கிறோம்.) இது எதிர்காலத்தில் மாறானதாக இருக்கும் என்று தேவன் நமக்கு சொல்லுகிறார். அப்பொழுது தீமை செய்தவர்கள் பாடுபடுவார்கள், நீதியுள்ளவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள். அந்த காலம் வரும் போது இளைப்பாறுதலின் ஆசீர்வாதம் தேவனுடையதாக இருக்கும். ஆசீர்வாதத்தை பெறுவதற்கு ஒரே வழி மேசியாவின் ராஜ்யத்தில் புது முறைமைகளுக்கு இணக்கமாக வருவது மட்டுமே ஆகும்.

**R5294**

## "THE SPIRITS OF JUST MAN MADE PERFECT"

# "பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்"

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்."- (எபிரேயர் 12:22,23)

அப்போஸ்தலர் இங்கே இந்த யுகத்தின் முடிவு அல்லது நிறைவைக் குறித்து சபையை நோக்கி கூறுகிறார். இந்த யுக முடிவில் அசைக்கக் கூடியது எல்லாம் அசைக்கப்படும். அதாவது அசைக்க முடியாததைத் தவிர சகலமும் அசைக்கப்படும் என்று இந்த சூழல் குறிப்பிடுகிறது. அப்பொழுது வந்திருக்கும் ராஜ்யம் மட்டுமே அசைக்க முடியாததாக இருக்கும். அப்போஸ்தலர் இதன் ஆரம்பத்தை, சீனாய் மலையில் ஆரம்பித்த நியாயபிரமாணத்தோடு ஒப்பிடுகிறார். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் இடி முழக்கங்களையும், மின்னல்களையும் எக்காள சத்தங்களையும் கேட்டார்கள்; மலை புகைகிறதையும் கண்டார்கள்; "மோசே, தேவன் இருந்த கார்மேகத்துக்குச் சமீபமாய் சேர்ந்தான்." மோசே மலையினிடத்திற்கு சென்றார். இவையெல்லாம் நிழலாக இருந்தன. நிழலான மத்தியஸ்தர் மோசேயினால் நியாயப்பிரமண உடன்படிக்கை முத்திரையிடப்பட்டது. (யாத்திராகமம் 20:18-22)

நாம் நெருங்குவது தான் உண்மையானது. இந்த யுக முடிவில் சபையானது அடைவது தான் உண்மையானதாக இருக்கும். அப்பொழுது உலகில் கிளர்ச்சி, சச்சரவுகளாகிய இடி முழக்கங்களும் மின்னல்களும் இருக்கும். நிழலில் இருந்தது போலவே உண்மையானதிலும் இருக்கும். ஜனங்கள் பயத்திலும் கஷ்டங்களிலும் சோர்ந்து போவார்கள். ஆபத்து நாட்களின் முடிவில் புது உடன்படிக்கை தொடங்கப்படும். மேசியாவாகிய இயேசு மத்தியஸ்தராக இருப்பார். அவர் மகிமையடைந்த தலை மற்றும் அவரது சரீரமாகவும் இருப்பார்.

நாம் முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இதில் தலையாகிய கிறிஸ்துவும் இந்த யுகத்தில் இப்பொழுதும் கடந்த காலத்திலும் உள்ள விசுவாசிகள் உள்ளடங்கி இருப்பார்கள். அது சிறுமந்தையையும் திரள் கூட்டத்தாரையும் உள்ளடக்கியிருக்கும். ஏனெனில் அவர்கள் சேர்ந்து பரலோகத்தில் பேரெழுதப்பட்டுள்ள முதற்பேறானவர்களின் சபையை அமைக்கிறார்கள். சிறுமந்தை கூட்டிச் சேர்க்கப்பட்ட பிறகு இந்த செயல் விளக்கம் நடைபெறும். நாம் ஒவ்வொரு நாளும் இந்த காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கூட நாம் சற்று அதனுள்ளே சென்று கொண்டிருக்கிறோம்.

"நீதிமான்களின் ஆவிகள்" பூரணமாக்கப்படும் இடத்தை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்றும் அப்போஸ்தலர் கூறுகிறார். இங்கே அப்போஸ்தலர் முடிவில் முதற்பேறானவர்களின் சபையின் அங்கங்கள் அனைவரையும் குறிப்பிட்டுவிட்டு பிறகு அதில் கொஞ்ச பேரை குறிப்பிடுவார் என்று நாம் யூகிப்பது சரியாக இருக்காது. ஆகையால் இந்த சொற்றொடர் இன்னொரு வகுப்பாரை குறிப்பிடுகிறது என்று நாம் முடிவு செய்யலாம். இயற்கையாகவே நாம் ஆராய முற்படும் போது, நமது சிந்தனை, சபையானது மகிமையடையும் வரை காத்துக் கொண்டிருக்கும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர் மேல் செல்கிறது. இப்படியாக இவர்கள் இங்கே சரியான முறைமையில் வருகிறார்கள். ஆகையால் முதற்பேறானவர்களின் சபை கூடியிருத்தலை கூறிய பிறகு பரிசுத்த பவுல் மற்றொரு வகுப்பாராகிய "பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவியைப்" பற்றி கூறுகிறார். இது சபையாக இருக்காது என்றும் பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்களைத்தான் குறிப்பிடுகிறது என்றும் கூற இன்னொரு காரணம் உண்டு. அதாவது, சபையோ அல்லது திரள் கூட்டத்தாரோ "பூரண மனிதர்களாக" ஆக்கப்படமாட்டார்கள். சபையானது மனித சுபாவத்தை விட்டுவிட்டு ஆவிக்குரிய வகுப்பாராக ஆவார்கள்.

ஆனால் எப்படி இந்த சொற்றொடரை பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களுக்கு நாம் உபயோகிப்போம்? நாம் இந்த சொற்றொடரில் வார்த்தைகளை இடம் மாற்றினால் இப்படியாக இருக்கும். "ஆவிகள் பூரணமாக்கப்பட்ட பூரண மனிதர்களிடத்தில்" நாம் வருகிறோம். பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் மாம்சத்தில் அபூரணமாக

இருந்தாலும், நீதிமான்களாக இருந்தார்கள். அப்போஸ்தலர் இந்த வகுப்பாரை குறிப்பிட்டு மேன்மையான உயிர்த்தெழுதலை பெறுவார்கள் என்று நமக்கு கூறினார். ஆனால் சபையைப் போல உன்னதமான உயிர்த்தெழுதலை பெறமாட்டார்கள். பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் கல்லறையிலிருந்து எழுந்து வரும் போது, மேன்மையான உயிர்த்தெழுதலை பெற்று, பூரண மாம்சத்தில் இருப்பார்கள். அவர்கள் ஆவியில் நீதிமான்களாக இருந்ததால் இளைப்பாறுதலின் காலத்தின் ஆரம்பத்தில் பூரணராக இருப்பார்கள்.

வேதவாக்கியங்களில் மலை என்பது பொதுவாக ஒரு ராஜ்யத்தை குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. சீயோன் மலை தேவனுடைய ராஜ்யத்தை குறிப்பிடுகிறது. இந்த சீயோன் மலை ராஜ்யம் முழு உலகத்தையும் உள்ளடக் கூடியதாக இருக்கிறது. இது சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்பட இருக்கிறது. அதன் ஸ்தாபகத்தைப் பற்றி தான் அப்போஸ்தலர் விவாதித்தார். ஒரு ராஜ்யம் உருவகத்தில் ஒரு நகரமாக அழைக்கப்படுகிறது. ஆனால் சரியானபடி சொல்லுவோமானால் ஒரு மலை ஒரு தேசத்தை குறிப்பிடுகிறது. நகரம் அந்த தேசத்தின் இராஜ்யத்தை குறிப்பிடுகிறது. உருவகமாக பேசுவது இப்பொழுது மிகவும் சாதாரணமாகி விட்டது. பெர்லின் இப்படி செய்தது என்று நாம் படிப்போமானால், அது ஜெர்மனி அரசாங்கத்தை குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். அல்லது செயின்ட் பிட்ஸ்பார்க் இதை செய்கிறது என்று நாம் வாசித்தோமானால், அது ரஷ்ய அரசாங்கத்தை குறிக்கிறது என்று பொருள். இதே போல வாஷிங்டன் என்பது அமெரிக்காவை, லண்டன் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் குறிப்பிடுகிறது.

நமது வசனம் தேவனுடைய பரிசுத்த ராஜ்யத்தை குறிக்கிறது. அதன் தனித்தன்மையை இழக்காமல், நகரம் முழு ராஜ்யத்தை குறிக்கிறது என்ற கருத்தில் அப்போஸ்தலர் பரம எருசலேமை தேவனுடைய நகரமாக பேசுகிறார். ஆகையால் ஒரு புதிய எருசலேம் ஒரு உயர்ந்த அரசாங்கமாக இருக்கும். அது தேவனுடைய ராஜ்யமாக இருந்து முழு உலகத்தையும் ஆளுகை செய்யும். ஆகையால் இந்த பல்வேறு சித்திரங்கள் பூமிக்குரிய சீயோனின் ராஜ்யமாகிய எருசலேமை அதன் உண்மைப் பொருளை நமக்கு காண்பிக்கிறது. பிறகு மற்ற கூற்றுகள் தொடர்கின்றன. அதில் ஒன்று ஆவியில் நீதியாக இருந்தவர்கள் பூரணமாக்கப்படுவதும் சார்ந்திருக்கிறது. இவர்கள் முன்னரே ஆவியில் நீதிமான்களாக இருந்தார்கள். இப்பொழுது அவர்கள் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெற்று பரிபூரணமாக்கப்படுவார்கள்.

இதனோடு இணைந்த ஒரு கூற்றை நாம் பெற்றிருக்கிறோம். “அதாவது ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள்.” இவர்கள் தேவனுக்கு மிகவும் ஊழியம் செய்ய வேண்டியவர்களான ஆவிக்குரிய தேவனுடைய தூதர்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். தன் பிதா முன்பாகவும் அவருடைய தூதர்கள் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கை பண்ணுவேன் என்று நமது கர்த்தர் பேசின போது குறிப்பிட்ட அதே தூதர்களை குறிக்கிறது என்று நாம் நினைக்கிறோம். இவர்கள் இந்த யுகம் முழுவதும் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்கிறவர்களாக இருக்கிறவர்கள். அவர்கள் நம்மை சந்திக்க வேண்டும். மேலும் நாம் தேவனிடம் அறிக்கை பண்ணப்படுதலை அவர்கள் காண வேண்டும் என்பது மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

**R5295**

## SPIRITUAL PROMISES TO NATURAL ISRAEL

# மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள்

வேத வாக்கியங்களில் ஆவிக்குரிய என்ற வார்த்தை நமது கர்த்தர் மற்றும் அவரை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை செய்ய தங்களை அர்ப்பணம் செய்தவர்களைப் போல ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்களை குறிப்பாக ஒரு தனிப்பட்ட வழியில் குறிப்பிடவே பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. இவைகளைச் சார்ந்த அனைத்து காரியங்களும், அனைத்து வாக்குத்தத்தங்களாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. “ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாக ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்.” (1 கொரிந்தியர் 2:14) ஆகையால் ஆவிக்குரிய யுகத்திற்கு முன்னதாக இஸ்ரயேலர்களுக்கு ஆவிக்குரிய எதையாவது கொடுத்திருந்தால், அதை அவர்கள் அவைகளின் மதிப்பை சரியாக உணர்ந்து கொண்டிருக்கமாட்டார்கள். ஏனெனில் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களைத் தவிர யாரும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது.

எனினும், மாம்சீக இஸ்ரயேலருக்கு ஆவிக்குரிய காரியங்கள் கொடுக்கப்பட்டன. அதை அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாக இருக்கிறது. நானோ பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்.” (ரோமர் 7:14) சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட அந்த நியாயப்பிரமாணமானது, ஆவிக்குரிய ஜீவிகளிலேயே மிகவும் உயர்ந்தவராகிய தேவனாலே கொடுக்கப்பட்டது. அது மாம்சீக சுபாவத்தையும், சரீரத்தையும் மாத்திரம் கட்டுப்படுத்தாமல் இருதயம், மனம் மற்றும் சித்தத்தை கட்டுப்படுத்துகிறது. யூதர்களில் யாரும் அதை கடைபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்கள் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டார்கள். அது ஆவிக்குரிய பிரமாணமாக, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களோ அல்லது தேவனுடைய ரூபத்தில் இருக்கிறவர்கள் மட்டுமே கடைபிடிக்கக் கூடியதாக இருந்தது.

### நியாயப்பிரமாணத்தில் ஆவிக்குரிய பாடங்கள்

நியாயப்பிரமாணத்தின் சில குறிப்பிட்ட பாடங்கள் ஆவிக்குரியவைகளாகவும் இருக்கின்றன. உதாரணத்திற்கு, அடிக்கப்பட்டவுடனேயே தண்ணீர் அபரிமிதமாக வந்ததே அந்த பாறை மற்றும் மன்னா ஒவ்வொரு ஆவிக்குரிய பாடத்தை தருகிறது. ஆனால் இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய பாறையைப் பற்றியோ அல்லது ஜீவத் தண்ணீரைப் பற்றியோ புரிந்து கொள்ளவில்லை. அதே போலவே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையும் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் அதன் வெளிப்பாகத்தை அல்லது மேல் ஓட்டை மட்டும் பார்க்க முடிந்தது. பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படும் காலம் வரை மேலும் எதையும் பார்க்க முடியவில்லை. இஸ்ரயேலருக்கு அநேக மாபெரும் ஆவிக்குரிய காரியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் உத்தம இஸ்ரயேலர்கள், தேவனுடனான நல்லிணக்கத்துடன் ஏற்ற காலத்தில் இவைகளை பார்க்கும்படி செய்யப்படும் என்று நாம் சொல்லக்கூடும்.

நியாயப்பிரமாணத்தில் ஆவிக்குரிய காரியங்கள் எப்பொழுதுமே இருந்தன. ஆனால் அவைகள் வெளிப்படுத்தப்படவில்லை, பகிரங்கப்படுத்தப்படவில்லை, யூதர்களால் காணப்படவில்லை. ஏனெனில் அவர்களது சொந்த மனநிலைமை அப்படியிருந்தது. ஆவிக்குரிய காரியங்களை காணும்படி அனுமதிக்கப்பட்ட முதல் யூதன் இயேசு தான். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட பிறகு தான் அவரால் அவைகளை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் யூத இனம் தேவையான தர நிலைக்கு வராததால் அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடக்க விரும்பி, அவர் மூலம் ஒரு மூடுதலைப் பெற்று பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட குறிப்பிட்ட சிலரால் மட்டுமே ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ள முடிந்தது. இதனால் அப்போஸ்தலர், "மாம்சத்தின் படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறியது" என்று கூறுகிறார். நியாயப்பிரமாணத்தை நம்மால் மாம்சத்தின்படி கைக்கொள்ள முடியாது. ஆனால் ஆவியின்படி கைக்கொள்ள முடியும். "என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியம் செய்கிறேன்." (ரோமர் 8:4;7:25)

### ஆவிக்குரிய நுண்ணறிவின் அடிப்படை

தேவன், ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்த போது, "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று கூறினார். ஆபிரகாமின் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் இருக்கும் என்று கூறினார். அப்போஸ்தலர் பேதுரு குறிப்பிடுவது போல, இந்த ஆவிக்குரிய வாக்குத்தத்தம் அந்த சமயத்தில் யூதர்களால் உணர்ந்து கொள்ளப்படவில்லை. ஒரு ஜாதியாக அவர்கள் தேவனுடைய குமாரனை சிலுவையில் அறைந்ததை உணர்ந்த போது, அநேகர், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். பரிசுத்த பேதுரு கூறினதாவது: "நீங்கள் மனந்திரும்புங்கள்....... வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் உண்டாயிருக்கிறது." (அப்போஸ்தலர் 2:38,39) அது ஒரு ஆவிக்குரிய வாக்குத்தத்தம். ஆனால் அவர்கள் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒரு சில யூதர்கள் மட்டுமே இந்த நிலைமைக்கு வர சரியான மனோபக்குவத்தில் இருந்தார்கள். "அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவர்களை ஏற்றுக்கொள்ள -வில்லை....... அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." (யோவான் 1:11,12) இவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுடன் உறவுக்குள் வந்து, இப்படிப்பட்ட இஸ்ரயேலர்கள் ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்து கொள்ள உதவும்படியாக பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டார்கள். மாம்சீக இஸ்ரயேலர்களுக்கு தேவன் கொடுத்தவைகளிலிருந்தே நாம் சகல சத்தியத்துக்குள்ளும் இழுக்கப்பட்டோம். மாம்சீக இஸ்ரயேலர்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தும் கூட நாம் அவைகளை புரிந்து கொள்ள முடிந்தது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "இஸ்ரயேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள் தெரிந்துகொள்ளப் -பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." (ரோமர் 11:7) ஆகையால் அவர்கள் புரிந்து கொண்டார்களோ இல்லையோ, ஆவிக்குரியவைகளை தேடுகிறார்கள். சிலரைத் தவிர மற்றவர்கள் யாரும் ஆவிக்குரியவைகளை அடையவில்லை. ஏனெனில் அவர்களது மன நிலைமை சரியானதாக இல்லை. ஆனால் தேடுவதற்கு ஆவிக்குரியவைகள் அங்கே இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களால் தேட முடியாது.

**R5296**

### INDIVIDUAL CONQUEST OF OUR INHERITANCE

## நமது சுதந்தரத்தை தனிப்பட்ட முறையில் ஜெயங்கொள்ளுதல்

"நீ மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு." – (யோசுவா 1:7)

நமது தலைப்பு வசனம், மோசேயின் மரணத்திற்கு பிறகு இஸ்ரயேலின் தலைவனாயிருந்த யோசுவாவிடம் தேவன் கூறின வார்த்தைகள். இந்த உற்சாகமூட்டும் வார்த்தைகள் அவருக்கு மிகவும் தேவையாயிருந்தது. இஸ்ரயேலர்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்களாக இருந்தார்கள். அவர்களுக்கு தலைவராயிருப்பது யாருக்கும் மிகவும் கடினமான காரியம். இந்த கஷ்டத்திற்கு காரணம் மோசே அவர்களுக்கு நீண்ட காலம் தலைவராயிருந்தது ஆகும். ஒரு பெரிய மனிதனுடைய இடத்தை ஒரு சிறிய மனிதன் எடுத்துக்கொள்ளுவது மிகவும் கஷ்டமான காரியம்.

அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையும் முன்பு, அவர்கள் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, அவர்களை வழி நடத்துவது சில விஷயங்களில் சுலபமாக இருந்தது. நாற்பது வருட கால வனாந்தர அனுபவத்தில் தேவனை சார்ந்திருக்கக் கற்றுக் கொண்டிருந்தார்கள். ஜனங்கள் தேவனுக்கு பயந்து அவருக்கு பயப்பட வேண்டும் என்று அறிவுறுத்தி, அவரை அவர்கள் கோப மூட்டினதை ஞாபகப்படுத்தி மோசே கூறியதாவது: "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிறுமைப்படுத்தும்படிக்கும், தம்முடைய கட்டளைகளை கைக்கொள்ளுவாயோ, கைக்கொள்ளமாட்டாயோ என்று அவர் உன்னை சோதித்து, உன் இருதயத்தில் உள்ளதை நீ அறியும்படிக்கும், உன்னை இந்த நாற்பது வருஷமளவும் வனாந்தரத்திலே நடத்தி வந்த எல்லா வழியையும் நினைப்பாயாக. அவர் உன்னை சிறுமைப்படுத்தி, உன்னை பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு, நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினால் உன்னைப் போஷித்தார்.

"இந்த நாற்பது வருஷமும் உன் மேலிருந்த வஸ்திரம்

பழையதாய்ப் போகவுமில்லை. உன் கால் வீங்கவும் இல்லை. ஒருவன் தன் புத்திரனை சிட்சிக்கிறது போல உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிட்சிக்கிறார் என்று நீ உன் இருதயத்தில் அறிந்து கொள்ளுவாயாக.'' (உபாகமம் 8:2-5) இஸ்ரயேலர்களது வனாந்தர பிரயாணத்தில் சில போர்களை மட்டும் செய்தார்கள். அமலேக்கியர்கள் அவர்களுடன் சில சிறிய சண்டைகளை செய்தார்கள். ஆனால் மொத்தத்தில் அவர்கள் குறைவான துன்பத்தையே அனுபவித்தார்கள். எனினும் அவர்கள் மோசேக்கு எதிராக ஒரு தடவைக்கு மேல் கலகஞ் செய்தார்கள்.

தற்போது அவர்களது எதிரிகள் கானான் தேசத்தில் வேரூன்றியிருக்கிறார்கள். தேசத்தை எடுத்துக்கொள்ள பலமும் திடமும் தேவைப்படும். கானானை அவர்கள் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். தேவன் கானானியரிடமிருந்து அந்த தேசத்தை எடுத்துக் கொண்டார். ஏனெனில் சோதோம் பட்டணத்தாரைப் போல, தேவ ஞானம் அனுமதித்ததற்கு மேலாக அவர்களது துன்மார்க்கம் பெருகியிருந்தது. சோதோமியர்களை தேவன் எடுத்தது போல, கானானியர்களை எடுக்காமல் இஸ்ரயேலர்கள் அவர்களை ஜெயங்கொண்டு தேசத்தை இஸ்ரயேலர்கள் பிடுங்கிக் கொள்ளும்படி செய்தார்.

### கானானை ஜெயங்கொள்ளுதல் ஒரு நிழல்

இஸ்ரயேலர்கள் கானானை சுதந்தரித்துக் கொள்ளுவதில் ஒரு தனிச்சிறப்பான முக்கியத்துவம் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இஸ்ரயேலர்கள், கானானியர்களுக்கு எதிராக போரிட்டது, சில காரியங்களில், புது சிருஷ்டியானது மாம்சத்திற்கு எதிராக போரிடுவதை நிழலாக காட்டியது. பழைய சிருஷ்டி வேரூன்றியிருந்ததை புது சிருஷ்டி சுதந்தரித்துக் கொண்ட அளவுக்கு, அது ஜெயங்கொண்டு தேசத்தை எடுத்துக் கொள்கிறது. தேவனுடைய ஜனங்களாகிய புது சிருஷ்டி மெய்யான யோசுவாவின் தலைமையின் கீழ் இருக்கிறார்கள். அவர்கள் தங்களால் முடிந்தவரை விழுந்துபோன சுபாவத்தின் பலவீனத்தையும் அற்பத்தனத்தையும் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மாம்சீக இஸ்ரயேலர்களையும் கானானியர்களையும் பார்க்கும் போது, கானானியர்கள் அந்த தேசத்தில் மிகவும் வேரூன்றி இருந்தார்கள். அநேக போர்கள் இல்லாமல் அவர்களை ஜெயங்கொள்ள முடியாது. கானானியர்கள் மலையில் வேகத்தன்மை உடையவர்களாக இருந்ததால் அவர்களை பின்வாங்கச் செய்வது கடினமானதாகும். இவைகள் நமது விழுந்துபோன சுபாவத்தின் வேகத் தன்மையை, புது சிருஷ்டியானது ஜெயங்கொள்ள முடியாதிருப்பதை நிழலாக காண்பிக்கிறது. பரிசுத்த பவுல் கூறுகிறதாவது: "நீங்கள் செய்ய வேண்டும் என்றிருக்கிறவைகளை செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.'' (கலாத்தியர் 5:17) நாம் ஜெயம் பெறுவது நாம் தேவன் பேரில் வைத்திருக்கிற விசுவாசத்தையும் நம்பகத்தன்மையும் பொருத்து இருக்கிறது.

இதே போலவே இஸ்ரயேலருக்கும் இருந்தது. அவர்கள் தேவன் பேரில் வைத்திருந்த நம்பிக்கையை பொருத்து அவர்கள் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுவது இருந்தது. லேவி கோத்திரத்தை தவிர, ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒரு குறிப்பிட்ட சுதந்தரம் கொடுக்கப்பட்டது. இதைப் போலவே தனிப்பட்ட புது சிருஷ்டிகளாக நமக்கும் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சுதந்தரம் நமக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்காக ஒருவர் ஜெயங்கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் தாங்களே தனிப்பட்ட முறையில் அவர்களது சுதந்தரத்தை ஜெயங்கொள்ள வேண்டும்.

நமது தலைப்பு வசனம் இஸ்ரயேலின் தலைவனாகிய யோசுவாவுக்கு சொல்லப்பட்டது. இந்த வார்த்தைகள் அனைத்து இஸ்ரயேலர்களுக்கும் சொல்லப்பட்டதாக புரிந்து கொள்ளலாம். ஆனால் விசேஷித்த விதமாக யோசுவாவுக்கு சொல்லப்பட்டது. ஏனெனில் அவர் அவர்களது தலைவனாக இருந்தார். யோசுவா என்ற வார்த்தைக்கு இரட்சகர், மீட்பர் என்று பொருள். எபிரேயு பாஷையில் யோசுவா என்பது கிரேக்க பாஷையில் இயேசு ஆகும். யோசுவா, கர்த்தரின் ஜனங்களை விடுவித்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரமாக கொடுத்தது போல, இயேசு, தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரயேலர்களை விடுவித்து, அவர்களது சுதந்தரத்தை தர வேண்டும்.

கானானின் வெற்றியோடு இணைந்த சோதனைகளும் துன்பங்களும் இருக்கும் என்பதை நமது வசனம் குறிப்பிடுகிறது: "நீ மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு,'' அந்த சோதனைகள் மற்றும் துன்பங்களுக்கு நிழலான இஸ்ரயேலர்களுக்கு பலமும் திடமானதும் தேவைப்படும். இதே போல மெய்யாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் கர்த்தரின் உடன் சுதந்தரருக்கும் இது உண்மையாக இருக்கிறது.

பலத்திற்கும், திடமனத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஒருவர் எடுத்துக்கொண்ட நிலைக்கு தகர்க்க முடியாத பலத்தைப் பெற்றிருப்பார். ஆனால் இன்னும் அதிகப்படியான வெற்றிகளுக்கு அவருக்கு மனோதிடம் இல்லாதிருப்பார். இந்த இரண்டு குணங்களுக்கும் இடையே வித்தியாசம் சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தில் விளக்கப்படுகிறது. சுய பலியில் தங்கள் ஜீவனை கொடுப்பதற்கு தங்களது தீர்மானத்தில் கர்த்தரின் உண்மையான பிள்ளைகள் பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பூமிக்குரிய ஜீவனைக் கொடுத்து, அவர்கள் தெய்வீக வாழ்வில் பங்கு பெறலாம்; ஆர்வத்துடன் முயற்சி எடுக்காதவர்களுக்கு தேவன் ஆசீர்வாதம் எதையும் வைக்கவில்லை.

திரள் கூட்டத்தாரும் கூட பலமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இல்லையென்றால் வெற்றிக் குருத்தோலைகளை பெற மாட்டார்கள். திரள் கூட்டத்தார் கடைசியில் கர்த்தருடைய உதவியால் ஜெயங்கொண்டாலும், அவர்கள் திட மனதுடையவர்களாக இருக்கவில்லை. இதுதான் சிறு மந்தைக்கும் திரள் கூட்டத்தாருக்கும் உள்ள வித்தியாசம். ஆகையால் இவர்கள் சிறு மந்தையாக இருக்க முடியாது. ஏனெனில் சிறு மந்தையானது மாபெரும் தலைவராகிய நமது

யோசுவாவை மிகவும் நெருங்கி பின் தொடர்கிறவர்கள். யேகோவாவின் ஊழியத்தில் தங்களது ஜீவனை சந்தோஷமாக கொடுப்பவர்கள். யோசுவா "முற்றும் ஜெயங்கொண்டவர்களை" குறிக்கிறார். இந்த வகுப்பாருக்கு கர்த்தருடைய பலம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் அவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக வருகிற எதையும் ஜெயங்கொள்ளுவதில் மிகவும் திடமானதாக இருக்கிறார்கள்.

**R5295**

## FEAR A CAUSE OF GREAT NERVOUS TENSION

# பெரும் பதட்டத்திற்கு பயம் ஒரு காரணம்

"கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான். "– (எபிரேயர் 13:6)

மிகவும் பதட்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கிற பயமானது உலகில் மாபெரும் தீங்குகளில் ஒன்று. இது மனிதன் சிருஷ்டிகருடன் இணக்கமாக இல்லாததின் பலனாக இருக்கிறது. தேவதூதர்களுக்கு பயம் இருக்காது என்று நாம் நிச்சயிக்கலாம். அவர்கள் தேவனுடன் இணக்கமாக இருப்பதினால், தேவன் அவர்களை அவர்களது சமாதான நிலைமையில் பராமரிக்கிறார். இதே போலவே நமது ஆதி பெற்றோர்களும் இருந்தார்கள் என்று நாம் உறுதியாக சொல்லலாம். அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட போது அவர்களுக்கு பயமில்லை. தெய்வீக பாதுகாப்பு அவர்கள் மேல் இருந்தது. ஆனால் பாவம் வந்தபோது, சாபம் பின் தொடர்ந்தது. பாவம் மற்றும் மரணத்தின் ஆறாயிரம் வருட ஆளுகையில் மனிதன் மிகவும் பயப்படுகிறவனானான். தன்னால் சமாளிக்க முடியாத சக்திகள் தனக்கு வெளியே இருப்பதாக உணருகிறான். இந்த அறிவு அவனது பெரும்பாலான அவனது சந்தோஷமான வாழ்வை சூறையாடுகிறது.

பயம் இல்லாதவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விதிவிலக்கானவர்கள். நமது தலைப்பு வசனம் பயம் இல்லாதவர்களைக் குறித்து கூறுகிறது. மேலும் இது ஏன் நியாயமான நிலைமை என்பதை நமக்கு காண்பிக்கிறது. இனி அவர்கள் பயப்படமாட்டார்கள். கர்த்தர் அவர்களது சகாயராக இருக்கும் பொழுது, மனிதன் அவர்களுக்கு என்ன செய்ய முடியும். மிருகங்களின் மேல் உள்ள பயத்தைக் காட்டிலும் மனிதனின் மேல் உள்ள பயம் மிகவும் அதிகம். கவிஞன் எழுதுகிறதாவது:

"மனிதர்களிடத்தில் மனிதாபிமானமற்ற மனிதன்,

ஆயிரம் பதினாயிரம் பேரை துக்கப்படுத்துகிறான்."

பாவத்தினிமித்தம் அநேகர் கொலைகாரர்களா –கிறார்கள். வெளிப்படையாக கிரியை நடப்பிப்பதை சட்டங்கள் அடக்கினாலும் அவர்கள் கொலைகார ஆவியையும் சுயநல ஆவியையும் உடையவராயிருக்கிறார்கள். இது எல்லா வகையான தவறுக்கும் அநீதியானவைகளுக்கும் வழி நடத்துகின்றது. உண்மையிலேயே அவர்கள் ஜீவனை எடுக்காவிட்டாலும் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி கொலை செய்யலாம். இப்படியாக மற்றவர்களின் மனதில் பயத்தை உருவாக்குகிறார்கள்.

### துயர் நீங்குவதற்கான மூல ஆதாரம்

சங்கீதக்காரன் இந்த மனித பயத்திலிருந்து விடுதலையான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் போன்றவர்களைக் குறித்து கூறுகிறார். அவர்களிடத்தில் உண்மையாயிருப்பது கிறிஸ்துவினிடத்தில் அர்ப்பணம் செய்தவர்களிடத்திலும் உண்மையாகவே இருக்கும். இரட்சகரால் சாத்தியமாக்கப்பட்ட பலியின் உடன்படிக்கையின் மூலம் தேவனிடம் உடன்படிக்கையின் விசேஷித்த உறவுக்குள் வந்ததே இந்த மன சமாதானத்திற்கு காரணமாக இருக்கிறது. அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகியிருக்கிறார்கள். "பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே." இப்படியாக தேவன் அவர்களது பிதாவானவராக இருந்து, அவர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவருடைய அன்பு, ஞானம் மற்றும் வல்லமை மேல் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்கிறார்கள்.

தேவனுடனான இந்த நம்பிக்கையினால் அவர்களுக்கு பயமில்லை. அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி செய்கிறவராயிருக்கிறார் என்ற உறுதி மொழியை அவர் கொடுத்திருக்கிறார். முதலாவது அவர்கள் இயேசுவின் சீஷர்களாக உலகத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் அதிகமான சோதனைகளையும் துன்பங்களையும் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவின் மூலம் பெற்றவர்கள் என்பதை கண்டார்கள். இந்த உணர்வு அவர்களை எச்சரித்து மிரட்டியிருக்கும். அவர்கள் ஆவியில் ஜெபத்தில் பிதாவானவரிடம் சென்றதாலும், அவர் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மூலமாக அனுப்பிய செய்திகளை கேட்டதினாலும் அவர்கள் தேவன் தங்களுடன் புது சிருஷ்டியாக தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்கள். படிப்படியாக அவர்கள் "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" என்பதை அறிகிறார்கள்.

பிதாவானவர் தமது பிள்ளைகளின் சரியான அபிவிருத்திக்கு தேவையான எதையும் வழங்காதிருக்க மாட்டார் என்ற வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறார். எனினும் சில காயங்கள் நமக்கு வருகின்றன. இப்படியாக அவர் நமது பூமிக்குரிய வாழ்க்கையை கொடுக்க இயலச் செய்வதற்கு தேவையான அனைத்து தேவைகளையும் நமக்கு அருளுகிறார் என்பதையும் நாம் காண்கிறோம். நமது அனுபவங்கள் மூலமாக சரியான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுவதால் பரிபூரண அன்பு, நமது பரம பிதாவின் சகல அடிமைத்தனமான பயத்தையும் புறம்பே தள்ளுகிறது என்பதை நாம் காண்கிறோம். ஏனெனில் நாம் அவரை நேசிக்கிறோம், நம்புகிறோம், நாம் சத்துருவானவனுக்கு பயப்படுவதில்லை. ஏனெனில் நாம் கர்த்தரிடம் நெருங்கி இருப்பதால், சத்துருவானவன் நம்மை காயப்படுத்த அவர் அனுமதிக்கமாட்டார் என்பதை அறிந்திருக்கிறோம். சத்துருவிடமிருந்தும் சக மனிதர்களிடமிருந்தும் நாம் சோதனை அனுபவங்களை பெற வேண்டும். தேவன் அனுமதித்தால், அவைகள் நன்மை செய்யும் என்ற நோக்கத்துடன் அவர் அப்படிச் செய்கிறார்.

"என் தேவனே, நீர் சத்தியமுள்ளவரென்று நான் முத்திரை போட்டு நிச்சயப்படுத்துகிறேன்,<br>உம்முடைய வாக்குதத்தத்தில் ஒன்றும் நிறைவேறாமல் போனதில்லை!"

**R5296**

# PRACTICAL LESSONS FORM THE LIFE OF ELI

# ஏலியின் வாழ்க்கையிலிருந்து நடைமுறைக்குரிய பாடங்கள்

*"அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக." – 1 சாமுவேல் 3:18*

சாமுயேல் மூலமாக கர்த்தர் ஏலியின் குடும்பத்திற்கு வரக்கூடிய அழிவைக் குறித்த செய்தியை அனுப்பினார். கர்த்தர் அனுமதிக்க சித்தம் கொண்டிருந்த அழிவைக் குறித்து கேட்ட பொழுது நமது பாடத்தின் ஆதார வசனத்தை ஏலி கூறினார். மேலும் அது அழிவு வந்த பிறகு அல்ல, அழிவு வருவதற்கு முன்னதாகவே கீழ்ப்படிவதை குறிப்பிடுகிறது. ஆகையால் இந்த வார்த்தைகள் ஏலியின் பணிவை குறிப்பிடுகிறது.

இஸ்ரயேலில் ஏலி அநேக வருடங்களாக நியாயாதிபதியாக இருந்திருக்கிறார். இன்னும் பதிவுகளை பார்க்கும் பொழுது அவர் முற்றிலுமாக முன்னுதாரணமாக அவரது சகல செயல்களிலும் நீதியாக இருந்திருக்கிறார். ஆனால் இவருடைய குமாரர்கள் "பேலியாலின் மக்கள்" என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் பல்வேறு வழிகளில் பொல்லாதவர்களாக இருந்தார்கள். ஏலியின் காரியங்கள் தேசத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாக இருந்த போது, இங்கே அவரது பராமரிப்பின் கீழும் அவருடைய ஒப்புதலின் கீழும் ஒரு முரண்பாடான செல்வாக்கு வளர்ந்தது. இந்த பொல்லாதவர்கள் ஒரு வேளை ஏலியின் குடும்பத்தராக இல்லாதிருந்தால் நிச்சயமாக அவர் நியாயதிபதி என்கிற தனது அதிகாரத்தை இவர்களிடத்தில் பயன்படுத்தியிருப்பார். இங்கே வேத பக்தியுடைய ஒருவர் தனது குடும்பத்தின் தலைவனாக இருப்பதில் பலவீனமுள்ளவராக பார்க்கிறோம். அவர் தனது குடும்பத்தின் தலைவனாக தனது பிள்ளைகளை சரியான வழியில் பயிற்றுவித்திருக்க வேண்டும். அவர் அவர்களை நீதியில் பயிற்றுவித்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் அவரது குடும்பத்திலிருந்து நீக்கப்பட்டு, நீதி வழங்குபவராகிய அவர் அவரால் செயல்படுத்தக்கூடிய குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

## ஏலியின் குணலட்சணத்தில் குறைபாடு

இந்த சம்பவத்திலிருந்து, தேவன் நம்மிடத்திலும் நமது குடும்பத்திலிருந்தும் எதிர்பார்க்கிறவைகளை ஒரு பாடமாக நாம் எடுத்துக்கொள்ளலாம். ஒரு பிள்ளை, திருடுகிறதாக, ஒழுக்கங்கெட்டதாக, தீமை செய்கிறதாக, தேவையின்றி குறுக்கிடுவதாக இருந்தால் கிறிஸ்தவ பெற்றோர் இப்படியாக தொடர அனுமதிக்கக்கூடாது. இதை எப்படியாவது முடிவுக்கு கொண்டு வர அவர்கள் கடமைபட்டிருக்கின்றனர். எனினும் தேவனிடத்தில் பயபக்தியாய் இருக்கும் காரியத்தில் நமது கருத்திலிருந்து அவர்கள் மாறுபட்டிருந்தால், அவர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும் என்று நினைக்கக்கூடாது.

பிள்ளையாண்டான் சாமுயேல் மூலமாக ஏலிக்கு வந்த செய்தியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அக்காலத்தில் தீர்க்கதரிசிகளுக்கு நடப்பதை போன்று கர்த்தர் தன்னை அழைத்து பேசும் குரலை சாமுயேல் கேட்டார். இது ஏலியின் குரல் என்று சாமுயேல் நினைத்து, ஏலியினிடத்திற்கு சென்று உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். ஏலி தான் அழைக்கவில்லையென்றும், திரும்பிப்போய் படுத்துக்கொள்ளமாறு சாமுயேலிடம் கூறினார். இப்படியாக மூன்று தரம் நடந்தது. கர்த்தர் பிள்ளையாண்டானை அழைப்பதாக ஏலி புரிந்து கொண்டார். ஆகவே சாமுயேலை மீண்டும் போய் படுத்துக்கொள்ளுமாறும் ஒரு வேளை மீண்டும் அழைக்கும் குரல் கேட்டால், "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று கூறி கர்த்தருக்கு ஊழியம் செய்ய சாமுயேல் தயாராயிருப்பதை காண்பிக்குமாறு ஏலி சாமுயேலிடம் கூறினார். சாமுயேல் தனக்கு சொன்னபடியே செய்தார். மேலும் ஏலி தனது குடும்பக் காரியங்களில் பொறுப்பில்லாமல் இருந்தால், அவர்கள் ஆசாரியத்துவத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சாமுயேலிடம் கூறினார்.

## ஏலியின் அருமையான கீழ்ப்படிதல்

கர்த்தர் சாமுயேலை செய்தி தொடர்பாளராக பயன்படுத்தினதற்கு எதிராக ஏலி எந்தவிதமான கோபத்தையும் காட்டாதது குறிப்பிடத்தக்க காரியமாகும். சாமுயேலை அவரது பெற்றோர்கள் அர்ப்பணித்தது முதல் ஏலி சாமுயேலை தனது குடும்பத்திற்கு ஏற்றுக்கொண்டிருந்தார். பிள்ளையாண்டான் சாமுயேல் வழியாக தேவன் தம்மிடம் பேசுவதின் மூலம் தேவன் தன்னை புறக்கணித்தார் என்று புரிந்து கொண்ட காரியமானது கோபத்தை மூட்டுகிற பெருமையின் ஆவியை தூண்டிவிடுவதற்கு போதுமானதாக இருந்திருக்கும். ஆனால் ஏலியின் மார்க்கமானது அவர் மென்மையான இருதயத்தை உடையவர் என்று காட்டுகிறது. கர்த்தர் தன்னிடம் தெரிவித்தை சாமுயேல் ஏலியிடம் கூறிய போது ஏலி, "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வராக" என்று சொல்லியிருந்தார். இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. இது நிச்சயமாக சரியானது! நிச்சயமாக நன்மையானது! கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக. ஒரு வேளை என்னுடைய சொந்த குடும்பத்திற்கு அழிவு வருவதாக இருந்தாலும், எனது குடும்பம் ஆசாரியத்துவத்திலிருந்து தள்ளப்படுவதாக இருந்தாலும், கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்று ஏலி கூறினார்.

ஆசாரியத்துவத்திலிருந்து ஏலியின் குடும்பம் தள்ளப்படுவது என்பது, ஏலியின் குமாரர்கள் மரித்துப் போவதைக் குறிக்கிறது. ஏனெனில் ஏலியின் குமாரர்கள் ஆரோனின் ஆசாரியத்துவமுறைமையில் ஆசாரியர்களாக வரவேண்டியவர்களாக இருந்தார்கள். ஏலியின் இந்த வார்த்தைகள் முழுமையான கீழ்ப்படிதலுக்கு உதாரணமாக இருக்கிறது. ஏலி சில விஷயங்களில் பலவீனமாகக் காணப்பட்டாலும் கூட சில விஷயங்களில் பலமுள்ளவராகக் காணப்படுகிறார். அதாவது தாழ்மையிலும் கீழ்ப்படிதலிலும் பலமுள்ளவராக காணப்பட்டார். சாந்தத்துடனும் கற்பிக்கத்தக்க நிலையிலும் உள்ளவர்கள், தங்கள் கீழ் உள்ளவர்களை கையாளும் விஷயத்தில் போதுமான அளவுக்கு உறுதியுடன் காணப்படுவதில்லை. இவர்கள் கர்த்தரிடத்தில் கீழ்ப்படியச் செய்கிறதும், சாந்தமாய் இருக்கச் செய்கிறதுமான பண்பானது, இவர்களை மற்றவர்களிடத்தில் இரக்கத்துடனும் கடுமையில்லாமலும் இருக்கச் செய்கிறது. ஆனால் கர்த்தர் மற்றும் அவரது கிருபைகள் மற்றும் ஏற்பாடுகளில் சாந்தத்துடனும் கீழ்ப்படிதலுடனும் காணப்படுகிற அதே சமயம் மற்றவர்களுடைய விஷயத்திலும் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்பது நல்லது.

## கிறிஸ்தவர்களுக்கான பாடங்கள்

இந்த சம்பவத்திலிருந்து கிறிஸ்தவர்கள் நல்ல பாடங்களை கற்றுக்கொள்ளலாம். கர்த்தர் எந்த வழியில் நமக்கு சத்தியத்தை அனுப்ப விரும்பினாலும், ஒரு குழந்தை மூலமாகவோ அல்லது யோவான், பேதுரு போன்ற படிக்காதவர்கள் மூலமாகவோ அனுப்பினாலும் அதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராயிருக்க வேண்டும்.

அப்போஸ்தலர் காலத்தில் படிக்காதவர்கள் தேவனுடைய செய்தியை வல்லமையுடன் பேசுவதை கேட்க ஆசாரியர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியமாக இருந்திருக்கும். இப்படி தடுமாறும் உதடுகள் மூலமாக தேவன் நிச்சயமாக பேசமாட்டார் என்று அவர்கள் சொல்வார்கள்! வருடக்கணக்காக வேத ஆராய்ச்சியில் இருக்கும் நம்மை, தெய்வீக முறைமையின்படி ஆசாரியர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிற நம்மை, தேவன் நிச்சயமாக ஒதுக்க மாட்டார் என்று அவர்கள் சொல்வார்கள். இப்படிப்பட்ட தவறான மனோபாவத்தில் அவர்களது செய்தியை நிராகரித்தது மாத்திரமல்ல, கர்த்தரையும் கூட நிராகரித்தார்கள்.

இது உலகத்தின் ஆவியாகவும் இருக்கிறது. வேதாகமத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தையை பேசுவதில் உண்மையுடன் இருப்பவர்கள் உலகப் பிரகாரமாக கவனிக்கப்பட மாட்டார்கள். சிருஷ்டிப்பின் வேலைகள் பரிணாம வளர்ச்சியினால் வந்தது என்று நினைக்கும் ஜனங்கள் அதிகமாகி வருகிறார்கள். இன்னும் அவர்கள் வேதாகமம் தேவனுடைய வார்த்தையல்ல என்று அதிகமதிகமாக நினைக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் ஏமாற்றப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மனிதர்கள் என்றும் இயேசுவே தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாதிருந்தார் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இயேசு ஒரு நல்ல மனிதர் என்றும் உண்மையாகவே தேவன் அவர் கூட இருந்தார் என்றும், ஏனெனில் அவரது போதகத்திலிருந்து நல்லவைகள் வெளி வந்தன என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இன்னும் அவர்கள் தங்களால் நல்ல ஞானத்தை கொடுக்க முடியும் என்று நினைக்கிறார்கள். இந்த மாபெரும் ஆசிரியர்கள் தங்களது சொந்த சிந்தனையின்படி ஒரு புது வேதாகமத்தை உருவாக்க விரும்புவார்கள்!

நமது காலத்தில் உலகப்பிரகாரமாக ஞானவான்களாக இருப்பவர்கள் தவறான கருத்தில் பார்க்கிறார்கள். அவர்கள் தவறான திசையில் நோக்குகிறார்கள். இப்பொழுது வருகிற புதிய யுகத்தை அவர்கள் பார்க்கவில்லை. சத்திய வெளிச்சம் உலகத்தை நிரப்பும் வரை இப்பொழுது என்ன நடந்துக்கொண்டிருக்கிறது என்பதை இவர்கள் உணரமாட்டார்கள். பிறகு சுற்றிலும் திரும்பி பார்த்து நீதியின் சூரியனை தெரிந்துகொள்ளுவார்கள். முழு நிலைமையையும் உணர்ந்து கொள்ள ஆரம்பிப்பார்கள். அவர்கள் சுற்றிலும் பார்த்து முற்றிலும் வேறான நிலையில் காரியங்களை நோக்குவார்கள் என்பதில் நாம் சந்தோஷம் அடைகிறோம். ஆனால் உண்மையான தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள் அனைவரும் தேவனுடைய செய்தி எந்த முறையில் அவர்களுக்கு வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார்கள்.

நமது வசனத்தில் ஒரு சிறப்பான கருத்து என்னவென்றால் ஏலி பேரழிவுக்கு தன்னை தாழ்த்தினார் என்பதாகும். இது அவருக்கு நல்ல மனநிலைமையாக இருந்தது. இப்படியாக தெய்வீக சித்தத்திற்கு எதிர்த்து நிற்காமல், சாந்தத்துடன் அதற்கு பணிந்து போவது, அவரது துன்பத்திற்கு காரணம் மாம்சத்தின் பலவீனமே என்பதை அவர் காண்பித்தார். இப்போது இப்படிப்பட்ட நிலைமையே இருக்கிறது என்பதைக் காண்கிறோம். தற்கால பேர் கிறிஸ்தவ முறைமைகள் கடந்து போகிறது என்பதையும், அது மகா ஆபத்தின் நாளில் தூக்கியெறியப்படும் என்பதையும் இன்று உணர்ந்து கொள்ள வேண்டியது கர்த்தருடைய ஜனங்களின் கடமையாக இருக்கிறது. இந்த செய்தி அநேகருடைய மனதில் கோபத்தை ஏற்படுத்துகிறது. அவர்கள் தங்கள் பண செல்வாக்கு, தங்கள் பலம் முதலானவைகளைக் குறித்து பெருமையடித்துக் கொள்ளுவார்கள். இந்த விழுகையைப் பற்றி குறிப்பிடுவது இயற்கையாகவே அவர்களது எதிர்ப்பை விழிப்படையச் செய்யும், நமக்கு முன்னே இருக்கிற மகா ஆபத்தின் நாட்களைப் பற்றி அவர்களுக்கு சொல்லும் போது, அவர்கள் நம்மேல் கோபங்கொள்ளுவதில் நாம் ஆச்சரியம் அடையக் கூடாது.

## இருதயம் உண்மையாயிருக்கிறது, ஆனால் பலவீனமாயிருக்கிறது

ஆசாரித்துவம் ஏலியின் குடும்பத்திலிருந்து நீக்கப்படும் என்ற செய்தி அவருக்கு ஒரு பெரிய அடியாகும். ஆகையால் ராஜரீக ஆசாரியத்துவத்தைப் பற்றிய செய்தி பேரளவிலான கிறிஸ்தவ தேசங்களுக்கு சுவையான செய்தியல்ல. ஆனால் அவர்கள் மத்தியில் இருக்கிற சில கர்த்தருடைய ஜனங்கள் தற்காலத்தில் இந்த காரியங்கள் மேல் அனுதாபம் கொள்வதில்லை. இப்படிப்பட்டவர்கள் தான், "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக!" என்று கூறுவார்கள்.

இது திரள் கூட்டத்தாரின் மனோபாவமாக இருக்கும். இவர்கள் கர்த்தருக்காக நிற்பதில் பலவீனமாக இருக்கிறார்கள். ஆனால் ஆபத்தின் நாட்களில் பணிந்து போவார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலும் அவரைச் சார்ந்த காரியங்களிலும் உண்மையாக இருப்பார்கள்.

சாமுயேல் சிறுமந்தை வகுப்பாரைக் குறிப்பதாகவும் ஏலி திரள் கூட்டத்தினரை குறிப்பதாகக் காணப்படுகிறது. பின்னானவர்கள் சில விஷயங்களில் பலவீனமுள்ளவராகவும் ஆனால் இருதயத்தில் கர்த்தருக்கு உண்மையுள்ளவராகவும் இருக்கிறார்கள். நாம் இங்கே சாமுயேலை பின்பற்ற நாட வேண்டும். நாம் அநீதியையும் பாவத்தையும் வெறுத்து நீதிக்கு இசைவாக இருக்க வேண்டும். நாம் தேவனுடைய செய்தியை பேச தயாராக இருக்க வேண்டும். அது விரும்பத்தகாத ஒன்றாகவே இருக்கும். தனது உபகாரியும், உற்ற நண்பராகவும் இருந்த ஏலியிடம் அவருக்கும் அவரது குடும்பத்துக்கும் வரவிருந்த அழிவைக் குறித்து சொல்வது சாமுயேலுக்கு மிகவும் விரும்பத்தகாததாக இருந்தும் கூட அவரைப் போல நாமும் கூட, சபைக்கும் உலகத்திற்கும் வரவிருக்கிற அழிவைக் குறித்து, அது நமக்கு விரும்பத்தகாததாக இருந்தாலும், தேவனுடைய செய்தியை சொல்ல நாம் தயாராக இருக்க வேண்டும்

ஆர்வமின்றியோ, சந்தோஷமாகவோ அவைகளை சொல்வதைக் காட்டிலும் அனுதாபத்துடன் சொல்லுவது நல்லது. தற்கால காரியங்களின் நிலைமைகளைக் குறித்தும் அவர்கள் மேல் இனி வரும் என்று நாம் உணர்ந்திருக்கிற காரியங்கள் குறித்தும் நாம் அவர்கள்மேல் பரிதாபப்பட வேண்டும். தங்கள் சபைகளிலிருந்து தேவனுடைய வல்லமை நீங்குகிறது என்றும் தாங்கள் ஒவ்வொன்றிலும் தவறான போதனையை உடையவர்களாக இருக்கிறோம் என்பது நிரூபணமாகிறது என்றும் தற்கால நிலைமை சமூக அமைதியின்மையையும் கிளர்ச்சியையும் நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்றும் ஊழியக்காரர்களிடமிருந்து அதிகமதிகமாக நாம் வார்த்தைகளை பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

**R5297**

## THE GOLDEN CALF

# பொன் கன்றுக்குட்டி

யாத்திராகமம் 32: 15-20, 30-35

''பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக!'' - 1 யோவான் 5:21

இஸ்ரயேலர்கள் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்தவுடன் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் ஒரு கடுமையான சோதனையை அனுபவித்தார்கள். இந்த சோதனையில் அவர்கள் முற்றிலுமாக தோற்றுப்போனார்கள். உடன்படிக்கையும் முறிக்கப்பட்டது. எனினும் அவர்களை தேவன் தண்டித்த பிறகு தேவன் அவர்களுடனான உடன்படிக்கையை புதுப்பித்தார். இது தெய்வீக இரக்கத்தின் புதிய வெளிப்படுத்தலை அமைத்தது.

இந்த சோதனையின் சூழ்நிலைகள்தான் இந்த பாடத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த உடன்படிக்கையை செய்த பிறகு தெய்வீக வழிநடத்துதலின்படி மோசே, தனது ஊழியக்காரன் யோசுவாவுடன் சீனாய் மலைக்குச் சென்றார். அவர் ஒரு பெரும் காலப்பகுதியான நாற்பது நாட்கள் சூழ்நிலையின் கீழ் அங்கே சென்றார். இஸ்ரயேலர்கள் மோசேயின் கைகளில் தங்களை குழந்தைகளைப் போல் உணர்ந்தனர். அவர் அவர்களுக்கு ஒரு விசேஷித்த உணர்வில் தேவனுடைய பிரதிநிதியாக இருந்தார். அவர் நீண்ட காலம் திரும்பி வராதிருந்தது, அவர்கள் விசுவாசம், பொறுமை, நம்பிக்கை ஆகியவற்றில் வளர்வதற்கு இடம் கொடுத்தது.

அவர்கள் கடந்து சென்ற சோதனையான அனுபவங்களை நினைவு கூர்ந்தனர். எகிப்தியர்களும் அடிமைத்தனமும் அவர்களுக்கு பின்னே இருந்தது. அமலேக்கியர்கள் அவர்களைத் தாக்கி அவர்களது விரோதிகளாக இருக்கின்றனர். இன்னும் அவர்கள் இஸ்ரயேலரைத் தாக்கவும் மோசேயின் கைகள் உயர்ந்திருக்கும் போது போரில் அவர்கள் தேவனுடைய கிருபையையும் செழுமையையும் பெற்ற அவர்கள், மோசே இல்லாதிருக்கும் போது அவர்களால் என்ன செய்யக்கூடும்?

இங்கே உலக ஞானம் உள்ளே வந்தது. மோசேயின் சகோதரனும் பிரதான ஆசாரியனுமான ஆரோனும் உடனிருந்த மற்ற பிரதிநிதிகளும், ஜனங்களை அதைரியம், பயம் முதலியவற்றிலிருந்து எப்படி வைத்திருப்பது என்று குழம்பியிருந்தனர். தேவனுடைய பிரதிநிதியை அவர்கள் காணும்படி செய்வது அவர்களுக்கு அவசியமாகக் காணப்பட்டது. தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியாகிய மோசே பார்வைக்கு காணப்படாமல் போனதிலிருந்து ஜனங்களால் உண்மையில் தேவனிடத்தில் முழுமையான நம்பிக்கை வைக்க முடியவில்லை.

ஜனங்களின் தலைவர்கள் ஒவ்வொருவரும் யோசனை செய்து, தேவனுடைய பிரதிநிதியை உருவமாக செய்து, அதை ஜனங்கள் காணும்படியும் அதை ஆராதிக்கும்படியும் செய்யலாம் என்று தீர்மானித்தார்கள். இஸ்ரயேலர்கள் பொன் கன்றுக்குட்டியை அவர்களுடைய தேவன் யேகோவா என்று நினைக்காமல் அதை வெறும் ஒரு அடையாளமாக அல்லது பிரதிநிதியாக எண்ணினார்கள். புறஜாதிகளும் சிலைகளை அவர்களது தேவர்களின் பிரதிநிதியாக பயன்படுத்தினார்கள். சில கிறிஸ்தவர்கள் கூட இயேசு அறையப்பட்ட சிலுவையை கிறிஸ்துவின் பிரதிநிதியாக கருதுகிறார்கள். அதை ஆராதிக்க அல்ல, கவனத்தை திருப்பவும், விசுவாசத்திற்கு உதவிபுரியவும் பயன்படுத்துகிறார்கள்.

இன்றைய பாடம், தேவன் தம்மை குறிக்க ஒரு அடையாளத்தை ஏற்படுத்துவதை முற்றிலும் வெறுத்தார் என்பதை தெளிவாக குறிப்பிடுவதாக காணப்படுகிறது. இது இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றாக இருந்தது. "தேவனுக்கு ஒப்பாக ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்." அதை பணிந்து கொண்டு, ஆராதிக்கவும் வேண்டாம்.

### பொன் கன்றுக்குட்டியை உண்டாக்குதல்

கன்றுக்குட்டி திடமான உலோகத்தில் செய்யப்பட்டதாக நாம் நினைக்கக்கூடாது. இஸ்ரயேலரின் சகல நகைகளை சேர்த்து திடமான உலோகத்தில் ஒரு கன்றுக்குட்டியை செய்ய போதுமானதாக இருந்திருக்கும் என்று நாம் நினைக்கக்கூடாது. அந்த காலத்தின்படி கன்றுக்குட்டியானது களி மண்ணினாலோ அல்லது மரத்தினாலோ செய்யப்பட்டு, அது உருக்கிய உலோகத்தால் மூடப்பட்டிருக்கலாம். இதற்கு ஜனங்களின் நகைகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இது உண்மையிலேயே செதுக்கப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது. இந்த விக்கிரகத்தை உருவாக்கி, தேவன் தங்களிடையே இருப்பதற்கு இது ஒரு ரூபகாரம் என்று நினைத்து ஜனங்கள் களிகூர்ந்தார்கள். அவர்கள் தங்களை, ஆடல், பாடல், விருந்து போன்ற கேளிக்கைகளில் உட்படுத்திக்கொண்டார்கள்.

மோசே தேவனுடன் மலையில் நாற்பது நாட்கள் கழித்த முடிவில் இந்த நிலைமை தான் அங்கே இருந்தது. மோசே பிரமாணங்களை அடங்கிய பலகைகளுடன் மலையிலிருந்து கீழே வந்த போது, அவர் ஜனங்களின் ஆரவாரத்தையும், பொன் கன்றுக்குட்டியை ஆராதிப்பதையும், பலிகளையும், தூபவர்க்கங்களையும் செலுத்துவதையும் கண்டார். மோசே கோபங்கொண்டார். அவர் தேவனுக்கும் இஸ்ரயேலருக்கும் மத்தியஸ்தராக, இருவருக்கும் பிரதிநிதியாக இருந்தார். கோபங்கொள்ள அவருக்கு உரிமையிருந்தது. ஏனெனில், தேவன் அவரை தேசத்திற்கு பொறுப்பானவராக நியமித்திருந்தார். அவர் தாம் இல்லாதிருந்த சமயத்தில் தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாக ஏற்பட்ட கடுமையான குற்றமாக அதை கருதினார்.

மோசே பிரமாணங்கள் அடங்கிய கற்பலகைகளை உடைத்துப்போட்டார். இது உடன்படிக்கை உடைக்கப்பட்டதை குறிப்பதாக இருந்தது. அவர் கீழே ஜனங்களிடம் சென்று தேவனுடைய பிரதிநிதியாக கோபங்கொண்டார். அவர்கள் தேவனிடமிருந்து பிரிந்து, சீக்கிரத்தில் பின்னடைந்து பாவத்தில் விழுந்ததால், மோசே தேவனுடைய அதிகாரத்துடன் அவர்களை நீதியாக தண்டித்தார்.

மோசே, ஜனங்களின் பிரதிநிதியாக இன்னும் அவர் உயர்ந்த தேசபக்தனாக இருந்தார். அவர் ஜெபத்தில் தேவனிடம் சென்று, இந்த பாவத்திற்கு தண்டனையாக ஜனங்களை அழிப்பதற்கு பதிலாக தனது பேரை கிறுக்கிப்

போடும்படி வேண்டினார். தேவனுடைய பார்வையில் மோசே மட்டுமே உண்மையுள்ளவராக காணப்பட்டார். ஆகையால் தேவன் மோசே மூலமாக ஒரு ஜாதியை உருவாக்கி அவர்களை இஸ்ரயேலுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை சுதந்தரிக்கும்படி செய்வேன் என்று கூறினார். இங்கே மோசே நிரூபித்த இப்படிப்பட்ட தேசபக்திக்கு சமமானதை நாம் காண இயலாது. அவர் இஸ்ரயேலரின் பிரதிநிதியாகவும், மத்தியஸ்தராகவும் அவருடைய வேலைக்கு உண்மையுள்ளவராக இருந்தார். அதே சமயம் அவர் தேவனுடைய பிரதிநிதியாகவும் தேவனிடம் உண்மையுள்ளவராகவும் இருந்தார் என்பதை அர்த்தப்படுத்துகிறது.

### "விக்கிரகங்களுக்கு விலகி உங்களை காத்துக்கொள்ளுவீர்களாக"

நாம் இப்போது பாடத்தை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு உபயோகிப்போம். கிறிஸ்தவன் உலகம், அடிமைத்தனம், பாவம் ஆகியவைகளை விட்ட பிறகு, மாராவின் கசப்பான அனுபவத்தை கடந்த பிறகு, தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளை பெற்ற பிறகு, பரலோகத்திலிருந்து வந்த அப்பத்தில் பங்கு பெற்ற பிறகு, தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் வந்த பிறகு, அவன் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கும் ஒரு நேரம் வருகிறது. அவன் கர்த்தரால் மெய்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் இந்த பாடத்தில் நிழலான இஸ்ரயேலர்கள் செய்ததைப் போல தோல்வியுற்றால், அது அவனுக்கு ஒரு அபாயகரமான காரியமாக இருக்கும்.

எந்த ஒரு கிறிஸ்தவனும் சொல்லர்த்தமான பொன் விக்கிரகத்தை செய்யக்கூடியவனாக இருப்பான் என்று கூறவில்லை. எனினும் விக்கிரகத்தை உண்டாக்கி, தேவனுக்குரிய நமது வழிபாட்டை திசைதிருப்பி, உறிஞ்சுகிற மாபெரும் சோதனைகளும் பரீட்சைகளும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் வரும் என்று கூறுகிறோம். பொன் கன்றுக்குட்டி என்பது வியாபாரத்தை ஆராதனை செய்வது. அவர்கள் முற்றிலுமாக தனது நேரத்தையும், சக்தியையும் கொடுத்து தங்களை முழுமையாக அர்ப்பணிப்பார்கள். அவர்கள் அதை தெய்வமாக மதிப்பார்கள். பணத்தின் மேலுள்ள ஆசை மற்றும் அது சம்பாதிக்கிற பொருட்களும் விக்கிரக ஆராதனைக்கும் வழி நடத்தும். அதன்மூலம் கர்த்தருடனான அவர்களது உடன்படிக்கையை முறித்துப்போடும். மற்றவர்கள் எதிர் பாலினத்தை வழிபாட்டுக்குரியதாக்கி, அதை தயவுக்காகவும், தோழமைக்காகவும் தாங்கள் வைத்திருக்கிற அனைத்தையும் கொடுக்கிறார்கள். அவர்கள் அப்போஸ்தலர் விளக்குவது போல, சிருஷ்டிகரைக் காட்டிலும் சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். அவர்கள் பெரிய தவறை செய்து கொண்டிருக்கிறார்கள். என்னைக் காட்டிலும் தனது தகப்பனையாவது, தாயையாவது, அல்லது குழந்தையாவது அல்லது சுயத்தையாவது அல்லது வேறு எந்த சிருஷ்டியையாவது நேசிக்கிறவன் எனக்கு பாத்திரவனாக இருக்க மாட்டான் என்று இதைத்தான் இயேசு அறிவித்திருந்தார்.

இன்னும் ஒரு விக்கிரகத்தை கவனிக்க வேண்டும். அதாவது தமது சபைப்பிரிவின் மேல் உள்ள பக்தி. பரிசுத்த பவுல் இந்த விக்கிரகத்தை குறித்து எச்சரித்து கூறுகிறதாவது: "உங்களில் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும் சொல்லுகிறார்கள்." (1 கொரிந்தியர் 1:12; 3:4) மனிதர்களைக் கனப்படுத்துகிற இது ஒரு வகையான விக்கிரக ஆராதனை இல்லையா என்றும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? என்றும் அவர் கேட்கிறார். இதே கொள்கையை நமக்கும் பொருத்திப் பார்த்து, சபைப்பிரிவை ஆராதிக்கிறதற்கு எதிராக நம்மை காத்துக்கொள்ளுங்கள். ஒருவர் "நான் கேல்வினைச் சேர்ந்தவர்" என்றும் இன்னொருவர் "நான் லூதரைச் சேர்ந்தவர்" என்றும், "நான் வெஸ்லியைச் சேர்ந்தவன்" முதலானவைகளைக் கூறினால், இவர்கள் மாம்சத்துக்குரியவர்கள் என்று நிரூபணமாகவில்லையா? மனித பெயர்களைக் கொண்டிருக்கிற மனித ஸ்தாபனங்களை ஆராதிப்பது இதை விட மோசமான அபாயமில்லையா? இப்படியாக தேவனுக்கும் கிறிஸ்தவனின் ஆத்துமாவுக்கும் இடையே ஏதோ ஒன்று இருப்பது ஆபத்தானதாக இல்லையா? இந்த திசையில் ஆபத்து இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மதக்கோட்பாடு என்கிற விக்கிரகத்திலிருந்து விலக வேண்டும் என்றும், தேவனுடைய பிள்ளைகள் எந்தவிதமான விக்கிரகத்திலிருந்தும் திரும்ப வேண்டும் என்றும், தேவனை மட்டுமே ஆராதிக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறோம்.

வேதாகமத்திற்கு பதிலாக மதக் கோட்பாடுகளை ஏற்படுத்தி ஆராதிக்கிற ஒரு சுபாவம் முதன்முலாக நிசேயா விசுவாச பிரமாணத்திலிருந்து (கிபி 325) ஏற்பட்டது. ஒவ்வொரு மதக் கோட்பாடும் தல்மூஸ் யூதரிடம் செய்தது போல, வேதாகமத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளுகிறது. "உங்களுடைய பாரம்பரியங்களினாலே தேவனுடைய வார்த்தையை வெறுமையாக்குகிறீர்கள்" என்று இதற்கு எதிராக இயேசு கூறினார்.

கிறிஸ்தவ தேசங்களின் மதக்கோட்பாடுகள் எல்லாம் சத்தியத்தைக் குறித்த கிறிஸ்தவ பாரம்பரியங்கள். தேவனுடைய பிள்ளைகள் முழு வேதாகமத்தைத் தவிர வேறு எந்த மதக்கோட்பாடும் இருக்கக்கூடாது என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தை எல்லாவற்றிலும் நம்பிக்கை வைத்து, தினமும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து அதன் போதனைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படியாக தேவனுடைய பிள்ளைகள் கிருபையிலும் அறிவிலும் வளர வேண்டும். மதக்கோட்பாடு என்கிற விக்கிரகத்தை ஏற்படுத்த இயலாதபடியும் கர்த்தருடைய பிள்ளைகளின் கவனத்தை பல்வேறு திசைகளில் திருப்பாதபடியும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# R5298

## TABLES OF THE LAW REPLACED

# நியாயப்பிரமாண பலகைகள் மாற்றப்பட்டன

''வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும் மனஉருக்கமும் நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ளவருமான தேவனாகிய நீர் அவர்களைக் கைவிடவில்லை.'' – நெகேமியா 9:17

மோசே, இஸ்ரயேல் மற்றும் நியாயப்பிரமாணம் ஆகியவை நிழலாக இருந்ததை பார்க்க தவறுபவர்கள் அவற்றிலிருந்து கிடைக்கிற பாடங்களை பெற்றுக்கொள்ள தவறுகிறார்கள். மோசே இயேசுவுக்கு மாத்திரம் நிழலாக இருக்கவில்லை; ஆனால் பரிசுத்த பேதுரு கூறுவது போல, தலையாகிய இயேசு மற்றும் மகிமையடைந்த சபையும் சேர்ந்த மகிமையான முழுமையான சபைக்கு நிழலாக இருக்கிறார். பரிசுத்த பேதுருவின் வார்த்தைகளாவன: "மோசே பிதாக்களை நோக்கி, உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்." (அப்போஸ்தலர் 3:22, 23)

இயேசு முதலாவது எழுப்பப்பட்டார். பெந்தேகொஸ்தே நாளிலிருந்து சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. தெரிந்துக் கொள்ளப்பட்ட சபையின் முழு எண்ணிக்கையும் கண்டு கொள்ளப்பட்டு, சோதிக்கப்பட்டு, மகிமைக்கு தகுதியானவர் என்று நிரூபிக்கப்படும் போது, இந்த வேலை நிறைவடையும். பிறகு மெய்யான மோசே, தேவனுடன் இணக்கத்துக்குள் திரும்ப வர விரும்புகிற சகல மனுக்குலத்தையும் இஸ்ரயேலரின் பன்னிரண்டு கோத்திரங்கள் மூலம் குறிப்பிடப்படுகிற அனைவரையும் விடுவிக்கிற மாபெரும் வேலையை ஆரம்பிப்பார்.

பரிசுத்த யாக்கோபு (1:18) சுவிசேஷ யுகத்தின் சபையை, "தம்முடைய (தேவனுடைய) சிருஷ்டிகளில் முதற்பலன்கள்" என்று அறிவிக்கிறார். வெவ்வேறு வழியில் அது முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுகிறது. அது லேவி கோத்திரத்தினால் நிழலாக குறிப்பிடப்படுவது. இந்த லேவி கோத்திரத்தார், பஸ்காவில் மீட்கப்பட்ட இஸ்யேலின் முதற்பேறானவர்களை குறிப்பிட்டார்கள். இந்த முதற்பேறானவர்கள், ஆசாரியர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள் என்று பிரிக்கப்பட்டார்கள. ஆசாரியர்கள், கிறிஸ்துவை, பிரதான ஆசாரியரையும் உதவி ஆசாரியரைகளையும் குறிப்பிட்டார்கள். லேவியர்கள் மீதமுள்ள ஜெயங்கொண்டவர்களைக் குறிப்பிட்டார்கள்.

மெய்யான ஆசாரியர்கள் ராஜரீக ஆசாரியர்களாக ஆக்கப்படுவார்கள். ராஜரீக கனங்களினால் உடுத்துவிக்கப்பட்ட மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசு, அவருடைய உடன் சுதந்தரரும், இராஜரீக ஆசாரியர்களுமாகிய உண்மையுள்ள சிறு மந்தையுடன் தம்மை இணைத்துக்கொள்வார். ஜெயம் கொண்ட மீதமுள்ள சபை அங்கங்கள் குறைந்த மகிமையுடையவர்களாக, எனினும் ஆவிக்குரிய சுபாவத்தில் கூட்டுப்பணியாளர்களாக இருக்கிறார்கள். இவர்களின் பிரதானமான வேலை, தேவனுடன் இணக்கத்துக்கு வரவிரும்புகிற உலக ஜனங்களை ஆசீர்வதிப்பதாகும். உலக ஜனங்கள் மீதமுள்ள இஸ்ராயேல் கோத்திரங்களால் குறிப்பிடப்படுகிறார்கள்.

### நியாயப்பிரமாணத்தின் முதற் பலகைகள்

நியாயப்பிரமாணத்தின் முதற்பலகைகள் கர்த்தராலேயே தயார்படுத்தப்பட்டு எழுதப்பட்டன. மனித சிருஷ்டிப்பு எப்படி அவனது சிருஷ்டிகரின் ரூபத்தின்படி உருவாக்கப்பட்டு, தெய்வீக சித்தத்திற்கு முழு இசைவாகவும், தெய்வீக பிராமணத்திற்கு முழுவதும் வெளிப்படையாகவும் இருந்தது என்பதை இது குறிப்பிடுகிறது. ஆதாமுக்கு இன்னும் தயார் படுத்தப்படுதலோ, ஒரு பூரண ஜீவியாக அவருக்குள் இருந்ததைத் தவிர வேறு எந்த பிரமாணமோ தேவையில்லாதிருந்தது.

ஆனால் பாவத்தினால் இந்த பிரமாணம் உடைக்கப்பட்டது. பலவீனமான மனுக்குலம் பாவத்தையும் நீதியையும் சரியானபடி தீர்மானிக்க முடியாதபடி இருக்கிறது. ஆதி பலகைகள் நொறுங்கி, தெளிவற்றதாக வளர்ந்திருக்கிறது. மனிதனுக்கு அவனது அநீதிக்கான சமரசத்தை ஏற்படுத்தவும் பிறகு தேவனுடைய பிரமாணத்தை அவனது மாம்சத்தில் திரும்ப எழுதவும் ஒரு மத்தியஸ்தர் தேவைப்படுகிறார்.

இரண்டு நியாயப்பிரமாண பலகைகளையும் தூக்கிப் போடும்படி மோசே அறிவுறுத்தப்பட்டார். இது மகிமையடைந்த கிறிஸ்து (இயேசு + சபை) தெய்வீக பிரமாணத்தை திரும்ப எழுதுவதற்கு மனுக்குலத்தின் இருதயத்தை தயார்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டார் என்பதை குறிப்பிடும். தேவனுடைய பிரமாணத்துக்கு மனிதனை கீழ்ப்படிய தயார்படுத்த அவர்கள் மறுசீரமைப்பை, பாவமும் சீரழிவும் நீக்கப்படுதலை அனுபவித்தல் தேவைப்படுகிறது. இந்த வேலை நிழலில் மோசேக்கும் உண்மைப் பொருளில் கிறிஸ்துவுக்கும் கொடுக்கப்பட்டது.

மோசே இரண்டாவது தடவையாக மலையிலிருந்து கொண்டு வந்த நியாயப்பிரமாண பலகைகள், உடைத்துப்போட்ட முதலாவது பலகைகளைக் காட்டிலும் விநோதமானதாக, வேறானதாக இருந்தன. இரண்டாவது பலகைகளுடன் வந்த போது மோசேயின் முகம் பிரகாசித்தது. அவருக்கு முக்காடு போடுவது அவசியமாயிருந்தது. அதன்பிறகு, ஜனங்களை சந்திக்கும் போது முக்காடு போட்டுக்கொண்டும், தேவனிடம் செல்லும் போது முக்காட்டை நீக்கிவிட்டும் இருந்தார்.

கிறிஸ்து இரண்டாம் வருகையில் மத்தியஸ்தருக்குரிய வேலைய செய்யும் பொழுது, அவரது மகிமை ஒரு முக்காட்டினல் மூடப்பட்டிருக்கும். ஆகையால் உலகம் இயேசுவைக் காணாது என்பதை இது குறிக்கிறது என்று நாங்கள் புரிந்துகொள்ளுகிறோம். இது இப்படியாக அறிவிக்கப்படுகிறது: "இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்." எனினும் சபையானது பூமிக்குரிய சுபாவத்திலிருந்து வானத்துக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்பட்டு, கிறிஸ்துவை மகிமையில் காண தயாராயிருக்கும் என்று அப்போஸ்தர் விளக்குகிறார். "அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்போம்." ஏனெனில் "நாம் அவருக்கு

ஒப்பாயிருப்போம்." "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்பட்டிருப்போம்." ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது." (1 யோவான் 3:2; 1 கொரிந்தியர் 15:50-52) தர்சு பட்டணத்தானாகிய சவுல் இயேசுவை மத்தியான வேளையில் சூரியனுடைய பிரகாசத்திற்கு மேலான அவரது மகிமையில் அவரைக் கண்டதை நாம் நினைவுகூருகிறோம். மூக்காடு நீக்கப்பட்டிருந்தது. அவரை பார்த்து, சவுல் தரையிலே விழுந்து பார்வையை இழந்தான்.

முக்காட்டை (யாத்திராகமம் 34:1,4,28-35) போட்டுக்கொள்ளுவது என்பது, கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில், மனிதர்களுக்கான அவரது மாபெரும் மத்தியஸ்த வேலையை நிறைவேற்றும் போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய மறுசீரமைக்கப்பட்ட பரதீசுக்கு அவர்களது தலைவராகிய, தமது மகிமையை முக்காடிட்டுக்கொண்டு, தமது ஆவிக்குரிய நிலைமையிலிருந்து நேரடியாக மனுமக்களுடன் பேசாமல் முக்காட்டின் வழியாக பேசுவார் என்பதை குறிக்கிறது. மனுக்குலம் இயேசுவை இனி பார்க்காமல் இருப்பது, அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். அதற்கு பதிலாக பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்கள் மூலமாக அவரைக் காண்பார்கள். இதைக் குறித்து அவர் அறிவித்தாவது: "நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்." (லூக்கா 13:28)

மனுக்குலம் பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களை அவர்கள் முன்னிருந்ததைப் போல காண்பார்கள் என்று அதற்கு பொருளல்ல. அதைக்காட்டிலும், மனுக்குலம் அவர்களை மனித பூரணத்தில் உயிர்த்தெழுந்தவர்களாக, ஆகையால் பூரணராக, தேவனுடைய ரூபத்தில், மனுக்குலம் அடையப் போவதற்கு முன்னுதாரணமாக இருப்பதைக் காண்பார்கள். மோசே நிழலாக காண்பிக்கப்பட்டிக்கிற மாபெரும் தீர்க்கதரிசியின் வார்த்தைளை கவனிக்கிறவர்கள் மாத்திரமே காண்பார்கள்.

அந்த காலத்தைக் குறித்து பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறதாவது: "அந்த தீர்க்கதரிசியின் சொற்கேளாதவன் (கீழ்ப்படியாதவன்) எவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்." (அப்போஸ்தலர் 3:22,23)

## நிழலின் மற்ற அம்சங்கள்

ஆரோனின் ஆசாரியத்துவத்தின் ஆசாரியர்களை அபிஷேகம் பண்ணுதல், இயேசு மற்றும் அவரது ராஜரீக ஆசாரியர்களை அபிஷேகம் பண்ணுவதற்கு முன்னடையாளமாக இருக்கிறது. நிழலில் அபிஷேகத்திற்கும் அர்ப்பணத்திற்கும் முன்பு பலிகள் செலுத்தப்படுவது அவசியமாயிருந்தது போல, உண்மைப் பொருளிலும் அப்படி செய்யப்பட வேண்டும். இயேசு தன்னையே ஒப்புக்கொடுக்க வேண்டியிருந்தது. இப்படி ஒப்புக் கொடுத்தது தேவனிடத்தில் தனது பக்தியையும் விசுவாசத்தையும் மரணபரியந்தம் பலியிடுதல் மூலம் காண்பிக்கிறது.

இதே போல கிறிஸ்து பிரதான ஆசாரியராக இருக்கக்கூடிய உதவி ஆசாரியர்கள், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டவர்கள், பலியின் மூலமே அவர்களது பதவிக்கு அர்ப்பணம் செய்ய முடியும். அடையாளமான பிரதான ஆசாரியத்துவத்துக்கு ஒரு காளை பலியாக இருந்தது. ஆனால் உண்மைப் பொருளில் கர்த்தரின் சரீரமே பலியாக இருந்தது. பொருளில் சபையின் மானிட சுபாவமாகிய மாம்சமே பலியாக இருக்கிறது. இப்படியாக பரிசுத்த பவுல், தங்களது பங்கைக் குறித்து சபைக்கு புத்தி கூறும் போது சொல்வதாவது: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்." (ரோமர் 12:1)

நிழலான பிரதான ஆசாரியன் மற்றும் உதவி ஆசாரியர்களின் விசுவாசத்தை நிரூபித்த அதே பலிகள் ஜனங்களின் பாவ நிவாரண பலிகளாகவும் ஆயின. அதே போல உண்மையான பலிகள் உலகத்தின் பாவங்களை மன்னிப்பதற்கு அடிப்படையாகவும், இப்படியாக தேவனுடைய குறித்த காலத்தில் உலகத்தை நல்லிணக்கத்திற்கு கொண்டு வருவதாகவும் இருக்கும். இவைகள் "விசேஷித்த பலிகள்" என்று பரிசுத்த பவுலால் குறிப்பிடப்படுகின்றன. (எபிரேயர் 9:23) வேறு வார்த்தையில் கூறுவோமானால், நிழலில் உள்ளவைகள் எல்லாம் சிறிய அளவிலும் உண்மைப் பொருளுக்கு கீழானதாகவும் இருக்கின்றன. நிழலான மத்தியஸ்தர் நிழலான பலிகளை செலுத்தினார். உண்மையான மத்தியஸ்தர் "விசேஷித்த பலிகளை" செலுத்தினார். நிழலான மத்தியஸ்தர் நிழலான இஸ்ரயேல் ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு வழி நடத்தினார். உண்மையான மத்தியஸ்தர் அவரது ஆயிரம் வருட அரசாட்சியில், கல்வாரி பலியினால் மீட்கப்பட்டதும், ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்து போனதுமான, ஆசீர்வாதங்களுக்கும் சலுகைகளுக்கும் ஜனங்களை வழி நடத்துவார்.

## கிருபையும், தயவுமுள்ள தேவன்

நமது தலைப்பு வசனம், தேவனை, வெகுவாய் மன்னிக்கிறவரும், இரக்கமும், மகா உருக்கமும், நீடிய சாந்தமும், மகா கிருபையுமுள்ள தேவன் என்று வருணிக்கிறது. இருண்ட யுகத்தில் நமக்கு கொடுக்கப்பட்ட விசுவாச பிரமாணம் மூலமாக தேவனுடைய குணலட்சணத்தை, கிறிஸ்தவர்களும் உலகமும் பொதுவாக எவ்வளவு தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை கற்பனை பண்ணி பார்ப்பது எவ்வளவு கடினமானதாக இருக்கிறது.

தேவன் தம்முடைய சிருஷ்டிகளை நித்திய காலமாக பேய்களின் கையில் கொடுத்து சித்தரவதை செய்ய நோக்கங்கொண்டிருக்கிறார் என்ற கருத்து எங்குமிருக்கிற நம்பிக்கையின்மைக்கும் புறஜாதிகளிடையே கிறிஸ்து தடைசெய்யப்படுவதற்கும், காரணமாயிருக்கிறது. சர்வ வல்லவரின் குணலட்சணத்தைக் குறித்த சகோதரர் கேல்வினின் தவறான கருத்தை தற்போது மனுக்குலம் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. கேல்வினின் போதனைகளை பிரிஸ்பட்டேரியன் நண்பர்கள் நிராகரித்ததால் முழு உலகமும் சுதந்திரமாக சுவாசிக்கிறது. கேல்வினின் போதனை தெரிந்துகொள்ளப்படாத அனைவரும் நித்திய ஆக்கினைக்கு போவார்கள் என்பதாகும்.

கடந்த காலத்தில் தேவன் தம்முடைய இரக்கம், தயவு ஆகிய குணங்களை, நிழலான வழியில், நிழலான ஜனங்களுக்கு, பாவங்களுக்காக அவர்களை தண்டித்து,

ஆனால் மன்னித்து, இன்னும் செல்லவும் மென்மேலும் முயற்சி செய்யும்படியும் அனுமதித்து, வெளிப்படுத்தினார். எனினும் நமது கர்த்தரின் முதலாம் வருகை வரையிலும் தேவன் தமது அன்பையும் இரக்கத்தையும் உலகத்திற்கு முழுமையாக வெளிப்படுத்தவேயில்லை. அந்த மாபெரும் சம்பவத்தில் நாம் வாசிக்கிறதாவது: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பினதினால், அவர் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்." "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைவான்."

அந்தக் காலம் வரை பாவமும் மரணமும் நீங்காமல் 4124 வருடங்கள் ஆளுகை செய்தது. தேவன் தம்முடைய குமாரனை அனுப்பியது அவரது மன்னிக்கிற நோக்கத்தின் முதலாவது வெளிப்பாடாகும். ஆனால் அவர் இன்னும் உலகத்தின் பாவத்தை மன்னிக்கவில்லை. தனது குமாரனின் மரணத்தினாலே இதற்கான சரியான ஏற்பாடுகளை செய்திருக்கிறார். தேவனுடைய குறித்த காலத்தில் உலகத்தின் பாவங்கள் நீக்கப்படும். முழு உலகமும் இன்னும் "பொல்லாங்கனுக்குள்" பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைகளாக இருக்கிறது. உலகத்தின் நம்பிக்கை பின்னால் மேசியாவின் ராஜ்யத்தின் மகிமையான ஆளுகைக்குள் இருக்கிறது. இது மெய்யான தீர்க்கத்தரிசி, ஆசாரியர் மற்றும் ராஜாவாகிய அவரில் மையப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குத்தத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாகிய மேசியா பூமியில் தேவனுடன் நல்லிணக்கத்துக்கு வரவிரும்புகிற மற்றும் கீழ்ப்படிதலுள்ள சகல ஜாதிகளையும் ஆசீர்வதித்து, உயர்த்தி உதவுவார்.

மகிமையான மேசியாவின் ராஜ்யத்தில், மேசியாவின் மணவாட்டியாகவும் உடன் சுதந்தரராகவும், உடன் ஊழியராகவும் இருக்கும்படியாக சபையை அழைக்கும் வேலை இன்னும் நடந்துக் கொண்டிருக்கிறது. அதற்காகவே நாம் ஜெபித்து, காத்துக்கொண்டிருக்கிறோம். "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக." அந்த ராஜ்யத்தில் தேவனுடைய இரக்கமும் மன உருக்கமும், அவரது ஞானமும் வல்லமையம் அபரிமிதமாக தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் சாட்சியமளிக்கப்படும்.

**R5299**

## AN INTERESTING QUESTION

# ஆவலைத் தூண்டும் ஒரு கேள்வி

### உரிமையின் படியல்ல, கிருபையின்படி

**கேள்வி :** கிறிஸ்துவின் மரணம் ஒவ்வொருவருக்கும் உயிர்த்தெழும் உரிமையைத் தருகிறதா?

**பதில் :** இல்லை! கிறிஸ்துவின் மரணம் அவரைத் தவிர வேறு யாருக்கும் அந்த உரிமையைத் தருவதில்லை. பிதாவனவரின் வாக்குத்தத்தத்தின்படி நமது கர்த்தரின் மரண பரியந்தமுமான விசுவாசம் அவருக்கு மேன்மையான உயிர்த்தெழுதலின் உரிமையைக் கொடுத்தது. மேன்மையான உயிர்த்தெழுதலை பெற்ற பிறகு, தேவனுடைய திட்டத்தின்படி, கீழ்ப்படிதலில் அவர் கொடுத்த பூமிக்குரிய உரிமைகளும், பூமிக்குரிய ஜீவனும் இனி அவருக்குத் தேவைப்படாது. எனினும் அவர் பூமிக்குரிய உரிமைகளை அவர் பறிமுதல் செய்யவோ, கொடுக்கவோ இல்லாமல், இன்னும் அவருடையதாக இருக்கிறது.

அது அவருக்கு தேவைப்படாது. ஏனெனில் அவர் மேன்மையான ஆவிக்குரிய சுபாவத்தை பரிசாக பெற்றிருக்கிறார். அந்த பூமிக்குரிய உரிமைகளை பிதாவானவரின் கைகளில், நீதியின் புஸ்தகத்தில் தம் கணக்கில் வைத்திருக்கிறார். நீதியின் புஸ்தகத்தில் அவரது கணக்கில் வைத்திருக்கிற பூமிக்குரிய உரிமைகளை பிதாவானவரின் ஏற்பாட்டின்படி, ஏற்ற காலத்தில் உலகத்தை வாங்குவதற்கு பயன்படுத்துவார். இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவரது பலியின் புண்ணியத்தை "சகல ஜனங்களுக்காகவும்" சமர்ப்பிப்பார். அது நீதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மனுக்குலம் முழுவதும் வந்து, இரட்சகரிடம் திருப்பப்படுவார்கள். இரட்சகர் மாபெரும் வல்லமையை எடுத்துக்கொண்டு தேவனுக்கும் மனிதருக்கும் இடையே மத்தியஸ்தராக இருந்துகொண்டு ஆயிர வருடம் அரசாளுவார். புதிய உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட இஸ்ரயேலரின் மூலமாக இந்த மத்தியஸ்தம் மனுக்குலத்தை சென்றடையும்.

மனுக்குலத்தின் மறுசீரமைப்பின் ஆசீர்வாதத்திற்கு இரட்சகர் தமது பூமிக்குரிய உரிமைகளை கொடுக்கக்கூடிய காலத்திற்காக காத்துக்கொண்டிருக்கும் போது, பிதாவானவர், சபையின் முதற்பேறானவர்களாக இருக்கும்படி அழைத்து இழுத்துக்கொண்டவர்களுக்கு இரட்சகர் தமது பலியின் புண்ணியத்தை பயன்படுத்தி பிதாவனவரின் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அழைக்கப்பட்டு, கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து திரும்பி, தனது சரீரத்தை ஜீவனுள்ள பலியாக தேவனிடம் சமர்ப்பிக்கிற ஒவ்வொருவருக்காவும் இரட்சகர், அவனது பரிகாரியாக அவனது பலியை ஏற்புடையதாக ஆக்கும்படி தமது பலியின் புண்ணியத்தை அவனுக்கு சாட்டுகிறார். பிறகு பலியானது ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறினவுடனே, சாட்டப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியமானது விடுவிக்கப்பட்டு, திருப்பப்படும். ஆகையால் யுக முடிவில் சபையானது கிறிஸ்துவின் புண்ணியத்தினால் உதவி செய்யப்பட்ட பிறகு, உண்மையான தொகை நீதியின் கரங்களில் சிதைவுறாதிருக்கும். அது முழு உலகத்தின் பாவங்களுக்கும் போதுமானதாக இருக்கும். கிறிஸ்துவின் ஆயிர வருட ஆளுகையில் ஆதாமுக்கும் அவரது சகல சந்ததிகளுக்கும் மறு சீரமைப்பின் ஆசீர்வாதத்தை கொடுக்க போதுமானதாக இருக்கும்.

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**